பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 29 புதன்கிழமை 12.05.2021 கதிர் 188

## இனி இது ரகசியம் அல்ல!

'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதை' என்பார்கள். அதையும் தாண்டி முதலுக்கே மோசம் என்றும் கூறுவார்கள். அப்படியாகியிருக்கின்றது இலங்கைத் தமிழரக் கட்சியின் தலைவரின் நிலைமை.

அவரின்

பக்கம்02 »

# தமிழினப் படுகொலையை நினைவுகூரும் நாளே மே 18

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிக்க வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம் அழைப்பு




(எஸ்.நிதர்ஷன்)

இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கேட்டுப் போராடும் மக்களோடு இணைந்து வடக்கு - கிழக்கு ஆயர்களாகிய நாம் மே 18ஆம் திகதியை இனப்படுகொலையை நினைவுகூரும் நாளாகவும் செப நாளாகவும் அனுசரிக்கும்படியாக வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் விநயமாகக் கேட்டுள்ளது வடக்கு - கிழக்கு ஆயர்மன்றம்.

☞ 2

## நேற்று மட்டும் 2,530 பேருக்கு 'கொரோனா'

இலங்கையில் நேற்று மட்டும் 2 ஆயிரத்து 530 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை

☞ 2

## யாழில் மேலும் 35 பேருக்கு தொற்று உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 35 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 55 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன்

☞ 2

# இரு நாள்களில் 49 பேரை பலியெடுத்த கொரோனா

## கொரோனாச் சாவு 850 ஆக உயர்வு

இலங்கையில் கடந்த இரண்டு நாள்களில் 49 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 850 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று 23 கொரோனா மரணங்களும், நேற்றுமுன்தினம் 26 கொரோனா மரணங்களும் பதிவாகியுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினமே நாட்டில் அதிகளவு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. வத்தேகம பகுதியைச் சேர்ந்த 3 மாத குழந்தை ஒன்றும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி நேற்றுமுன்தினம்

உயிரிழந்துள்ளது. அத்துடன் அன்றைய தினம் 14 ஆண்களும், 11 பெண்களும்

☞ 2

# பேரழிவு ஏற்படும் அபாயம்; பரந்தளவு முடக்கம் தேவை

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாரிய அழிவுகள் ஏற்படாதிருக்க பரந்தளவிலான முடக்க நிலையை அமுல் செய்ய வேண்டியது அவசியம் என்று இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டில் தீவிர சிகிச்சை பிரிவுகள் நிரம்பிவிட்டதால் பல நோயாளிகள் தீவிர சிகிச்சைக்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். கொரோனா அல்லாத நோயாளிகளும் இறந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் பரந்தளவிலான சமூக முடக்கநிலையை அறிவிக்காவிட்டால்

☞ 11

## 'கொரோனா' சுகாதார நடைமுறைகளை மீறி

# குருந்தூரில் இராணுவப் பாதுகாப்புடன் பௌத்த மயமாக்கல் செயற்பாடு தீவிரம்



(ந.லோகதயாளன்)

தமிழர்களின் பூர்வீக இடமான முல்லைத்தீவு-குருந்தூர்மலையில் கொரோனா சுகாதார நடை முறைகளை மீறி இராணுவப் பாதுகாப்புடன் பௌத்த மயமாக்கல் செயற்பாடு தீவிரமாக இடம் பெறுகின்றது.

கொரோனா சுகாதார நடைமுறைகளை மீறிய இராணுவத்துக்கு எதிராக அரசின் நடவடிக்கை என்ன? என்று என்று முன்னாள் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

குருந்தூர்மலைக்கு நேற்றுமுன்தினம் தொடக்கம் பௌத்த பிக்குகள், இராணுவத்தினர் உள்ளிட்ட பலரும் பாரிய அளவில் செல்கின்றனர் எனவும், அங்கு பாரிய அளவில் நிகழ்வொன்று இடம்பெறுவதற்கான ஆயத்தப் பணிகள்

☞ 11

## மதுபானசாலைகளை மாலை 6 மணிக்கு மூடுமாறு உத்தரவு

கொழும்பு, மே 12

நாட்டில் நேற்று தொடக்கம் தினமும் மாலை 6 மணிக்கு அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

# இரவில் மீண்டும் ஊரடங்கு?

நாட்டில் கொரோனாப் பரவல் தீவிரம் பெற்றுள்ள நிலையில் மீண்டும் ஊரடங்கை நடைமுறைப்படுத்துவதா? என்பது தொடர்பில் கொரோனா தடுப்புச் செயலணியால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊரடங்கை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் அதனை இரவு 11 மணி தொடக்கம் அதிகாலை வரையில் நடைமுறைப்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டால் குறித்த காலப்பகுதியில் பொருள்கள் கொள்வனவுக்காக வீடுகளில் இருந்து ஒருவர் மாத்திரமே வெளியில் சென்றுவர அனுமதி வழங்குவதும், அடையாள அட்டையின் இறுதி

☞ 2

# ஊரடங்கு குறித்து வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

இரவு வேளையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பது தொடர்பில் அரசு இதுவரையில் தீர்மானிக்கவில்லை என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்க அரசு தீர்மானித்துள்ளது எனச் சில சமூக வலைத்தளங்களில் நேற்றிரவு செய்திகள் வெளியாகியிருந்தன.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இராணுவத் தளபதி, அந்த தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று குறிப்பிட்டார்.

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கதைக்காக 'குத்துக்கரண மாஸ்டர்' ஆகியிருக்கின்றார் அவரது கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம்.

வழக்கமாக இப்பத்தியில் தம்மையோ, தம்முடன் தொடர்புடைய விடயங்களையோ நான் கோடி காட்டியிருந்தால் ஓரிரு வரிகளில் 'நச்' சென்று ஓர் ஆணி அடிப்பார் சத்தியலிங்கம். அவை 'சுருக்' என்று ஏறும் விதத்தில் இருக்கும்.

ஆனால் கடந்த இரண்டு நாள்களாக அவரையும் தொடர்புபடுத்தி ஒரு விடயத்தைத் தொடர்ந்து இப்பத்தியில் குறிப்பிட்டு வந்தேன். மருத்துவர் சத்தியலிங்கம் தனது கட்சிப் பொறுப்பில் – கடமையில் – நேர்மையாகச் செயற்படுவார் என்று எனக்கிருந்த நம்பிக்கையினால் நானே சில விடயங்களைக் கோடி காட்டினேன். ஆனால் அவரிடமிருந்து அதிசயமான மௌனம். வழமைக்கு விரோதமாக – விநோதமாக – அவர் பம்மிக் கொண்டிருந்தார். கடைசியில் பார்த்தால் அவர் நேரத்துடனேயே 'பல்டி' அடித்து விட்டார். அதனால்தான் இந்தப் பம்மல் எல்லாம்...!

கடந்த பொதுத் தேர்தலின் போது தமிழரசுக்கும் தமிழக் கூட்டமைப்புக்கும் எதிராகப் பகிரங்கமாக வேலை செய்த கூட்டமைப்பின் உள்ளூராட்சி உறுப்பினர்களைக் கட்சியிலிருந்தும் உள்ளூராட்சி உறுப்பினர் பதவியிலிருந்தும் விலக்குவது எனத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு அதன் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் கூடி ஏகமனதாகத் தீர்மானித்தது. அதன் பிரகாரம், அடையாளம் காணப்பட்டோரை கட்சியிலிருந்தும் உள்ளூராட்சி உறுப்பினர் பதவிகளில் இருந்தும் வெளியேற்றும் கடிதம் தமிழரசு பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கத்தினால் அனுப்பப்பட்டன. வடக்கிலும், கிழக்கிலும் பலருக்கு எதிராக இத்தகைய கடிதங்கள் சம்பந்தப்பட்டோருக்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டன.

ரெலோவிலிருந்து பிரிந்து தனிக்கட்சி அமைத்த சிவாஜிலிங்கத்தின் தனிப்பட்ட ஆதரவாளர் ஓரிருவரும் இப்படி பதவி இழக்கும் பட்டியலில் அடங்கினர். வல்வெட்டித்துறை நகர சபையில் அதன் தலைவர் உட்பட மூவர்.

சிவாஜியர் மாவையரைச் சந்தித்தார். வடக்கு மாகாண முதலமைச்சர் கனவில் நப்பாசையுடன் காத்திருக்கும் மாவையருக்கு, அதற்காக சிவாஜியின் ஆதரவும் தேவைப்படுவது தெரிந்த விடயம்தான். அதனால் சிவாஜியின் கோரிக்கையை சிரமேற்கொண்டார் தமிழரசுத் தலைவர். மத்திய செயற்குழுவின் முடிவைத் தூக்கிக் கடாசினார்.

மாவையிடமிருந்து கட்சியின் பதில் பொதுச் செயலாளருக்கு கட்டளை பறந்தது – அனுப்பிய கடிதத்தை வாபஸ் பெறுங்கள் என்று.

மத்திய செயற்குழுவின் முடிவை நாம் மீற முடியாது என்று ஆரம்பத்தில் நேர்மையாய் – நீதியாய் – நின்றார் சத்தியலிங்கம். அப்படித்தான் தொடர்ந்தும் நிற்பார் என்று நானும் நம்பினேன் – அவரது இயல்பை அப்படி எண்ணி. அதனால், சத்தியலிங்கம் அசையார் என்ற சாரப்பட நான் நேற்றும் கோடி காட்டியிருந்தேன்.

ஆனால், பதவியைத் தக்க வைக்கவோ, என்னவோ மத்திய செயற்குழுவின் முடிவுக்கு மாறாக – தாம் முன்னர் எழுதிய ஒழுக்காற்றுக் கடிதத்தை சத்தம் சந்தடியில்லாமல் கைவாங்கியிருக்கின்றார் சத்தியலிங்கம். அதுவும் ஐந்தாறு நாள்களுக்கு முன்பாகவே.

இது பற்றிய எனது செய்தி வந்த முதல் நாளே, ஏற்கனவே தாம் மாவையின் அழுத்தத்துக்கு அடிபணிந்து – மத்திய செயற்குழுவின் முடிவுக்கு மாறாக – கடிதத்தை வாபஸ் பெற்று விட்டார் என்று அவராகவே நச்சென்று ஒரு வார்த்தையில் சொல்லியிருக்கலாம். சொல்லவில்லை. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது போல சத்தமின்றிப் பம்மிக் கொண்டாரோ, என்னவோ...?

ஆனால், சிவாஜிலிங்கத்துக்கு கொடி பிடிக்கப் போய் கட்சிக்குள்ளும் தமிழ்க் கூட்டமைப்புக்குள்ளும் தன் எதிர்ப்பணியை ஒன்று சேர்க்க வழி பண்ணியிருக்கின்றார் மாவை. அதைத்தான் 'பிள்ளையார் பிடிக்கப்போய்...' என்று குறிப்பிட்டேன்.

ஏற்கனவே தமிழரசுக்கு எதிராகச் செயற்பட்ட வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்களை மத்திய செயற்குழுவின் முடிவுக்கு மாறாக, சமாளித்து அரவணைக்கும் மாவை தரப்பின் எத்தனத்தை சுமந்திரன் கடுமையாக எதிர்த்து வந்தார். இப்போது சிறிதரன் எம்.பியையும் மாவை தரப்பின் இந்த நடவடிக்கை நன்கு பாதித்து விட்டதாக அறிந்தேன்.

மாவையை நம்பிப் பயனில்லை, அவருக்குப் பரிந்து பேசியமைக்காக இனி மேல் முகத்தில் துண்டு போட்டுக் கொண்டுதான் கட்சிக் கூட்டங்களுக்குப் போக வேண்டும் என்று வெதும்புகிறார் சிறிதரன் என ஒரு தகவல்.

*"வடமராட்சி எங்கள் வீரம் விளைந்த மண். தலைவனின் தியாகபூமி. அங்கு தமிழ்த் தேசியத்தைத் தோற்கடிக்கச் செய்து, சிங்களக் கட்சியை நிலைநிறுத்த வழி செய்தவர்களுக்காக மாவை பரிந்து நடந்து கொள்வது வெட்கம், வெட்கம். அதுவும் கட்சியுடன் தொடர்பே இல்லாத சிவாஜியின் கதைக்கு மாவை நடனமாடுவதை நீங்கள் பார்த்திருப்பதா?"* – என்று சிறிதரனின் ஆதரவாளர் ஒருவர் அவரிடமே நேரில் கூறியபோது, அண்மைக் காலத்தில் மாவைக்காகப் பகிரங்கமாகப் பரிந்து பேசிய சிறிதரனினால் கூனிக் குறுக முழிந்ததே தவிர, பதிலளிக்க வேறு வழியிருக்கவில்லை என்றது அவரின் உள்வீட்டு வட்டாரம் ஒன்று.

தலைவரின் பிரதேசம், அங்கு தமிழ்த் தேசியம் தோற்கடிக்கப்பட்டது, அதற்குக் காரணமானவர்களுக்கு மாவை முண்டு கொடுக்கின்றார் என்ற விடயங்கள் எல்லாம் சுமந்திரனுக்குப் பெரிதும் சுடாது. ஆனால் சிறிதரன் அப்படியல்லர். சிறிதரனுடன் அவரின் பிழையான பக்கத்தில் உரசும் வேலை இது. அடுத்த மத்திய குழுக் கூட்டத்தில் மாவைக்கும் சத்தியலிங்கத்துக்கும் நல்ல மங்களம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

மாவையின் நடவடிக்கையும் அதற்கு வளைந்து கொடுத்த சத்தியலிங்கத்தின் குத்துக்கரணமும் தமிழரசுக்குள் மட்டுமல்ல, கூட்டமைப்புக்குள்ளும் திரியைப் பற்ற வைக்கத் தவறவில்லை.

'பேட்ட' படத்தில் ரஜனி கோபத்துடன் எதிரிகளை எதிர்பார்த்துக் காவல் இருப்பார்.

*"ஏய்... எவனுக்காவது பெண்டாட்டி, குழந்தை குட்டி எண்டு செண்டிமெண்டு, கிண்டிமெண்டு இருந்தா அப்பிடியே ஓடிப்போயிடு... கொலைகாண்டில இருக்கேன். மவனே கொல்லாம விடமாட்டேன்."* – என்று சீறுவார். அப்படி கோபத்தின் 'காண்ட்ல' இருக்கின்றார் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் என்றும் ஒரு தகவல்.

*"யார் சிவாஜி? நாங்கள்தான் ரெலோ. எங்கள் கட்சியின் முடிவுக்கு மாறாக, கட்சியை நலிவுபடுத்த முயலும் சிவாஜிக்காக இரங்கி – இறங்கி – கூட்டமைப்பைக் காட்டிக் கொடுக்கும் வேலைக்கு மாவையர் உடந்தையாகலாமா?"* – என்று சீறும் செல்வம், தமது கட்சியின் உறுதியான நிலைப்பாட்டை மாவைக்கு ஏற்கனவே தொலைபேசியில் கூறிவிட்டார் என்று தெரிகின்றது. மேலும் நேரடியாக வற்புறுத்தி, உறுதிபடத் தங்கள் நிலைப்பாட்டை மாவையருக்குத் தெரிவிப்பதற்காக இன்று மன்னாரில் இருந்து மாவிட்டபுரத்துக்குச் விசேடமாகச் செல்கின்றார் என்றும் தெரிகின்றது.

சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்ற மாதிரி, தனது முதலமைச்சர் கனவு என்ற நப்பாசையை எட்டுவதற்காக சேராத அணி எல்லாம் சேர்ந்து, கூடாத கூட்டம் எல்லாம் கூடி, தேவையில்லாத தரப்புகளை எல்லாம் சேர்த்து, பிழையான தீர்மானங்களை எல்லாம் எடுத்து, தனக்குத்தானே மண் வாரி அள்ளிக் கொட்டுகின்றார் மாவையர்.

அவரின் தவறான முடிவுகளுக்குத் துணைபோய் தன்னை ஒரு நேர்மையான நிர்வாகி என்று சமூகம் நம்ப முடியாத நிலையை தனக்குத்தானே ஏற்படுத்திக் கொள்கின்றார் சத்தியலிங்கம்.

கட்சிக்குள்ளேயே நேர்மையாக நடக்க முடியாதவர் – மத்திய செயற்குழுவின முடிவை நடைமுறைப்படுத்தும் தமது கடப்பாடு புரிந்து, அதைச்செய்ய முயன்று, பின்னர் பிறரின் அழுத்தத்துக்கு அடிபணிந்து, ஒழுக்காற்று நடவடிக்கைக் கடிதத்தை வாபஸ் பெறும் விதத்தில் – முறையற்ற வகையில் – நடந்து கொண்டமை மூலம் – நிர்வாக விவகாரத்தில் கெட்ட பெயரை சம்பாதித்துள்ளார் சத்தியலிங்கம்.

தமது பொறுப்பை உறுதியாக ஆற்ற முடியாதவர் – தவறான அழுத்தத்துக்கு அடிபணிபவர் – எப்படி ஒரு மாகாணத்தை வழி நடத்த முடியும்? மாவையுடன் சேர்த்து – சேர்ந்து – தனது தகுதியையும் தாழ்த்திக் கொண்டு விட்டார் சத்தியலிங்கம். அவ்வளவே.

– மின்னல் –

---

## இரு நாள்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, நேற்று 15 ஆண்களும், 8 பெண்களும் என 23 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

---

## தமிழினப் படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு தெரிவித்து வடக்கு – கிழக்கு ஆயர் மன்றத்தால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

போரில் பலியானோரை நினைவுகூரும் தினம் என்று குறிப்பிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள குறித்த அறிக்கையில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கி. நோயல் இம்மானுவேல், யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு யோசப் பொன்னையா ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர்.

அந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு:–

மே மாதம் 18ஆம் திகதி இலங்கையின் வடக்கு – கிழக்கு வாழ் மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவாகும். இறுதிப் போரின்போது பலியானவர்களுக்கு இறுதிக்கிரிகைகள்கூட செய்ய முடியாது புதைத்துவிட்டு தப்பிப் பிழைத்து வந்தவர்களும், அதற்குச் சாட்சிகளாக இருக்கும் ஏனையவர்களும் பலியானவர்களைக் கண்ணீரோடு நினைவுகூரும் நாளாகும். இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையுடைய நாளாகவும் அந்நாள் இருக்கின்றது. படுகொலை செய்யப்பட்டவர்கள் அனுபவித்த வேதனைகளும் துன்பங்களும் விடுதலை வாழ்வுக்குத் தொடர்ந்து பங்களிப்புச் செய்கின்றன.

இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கேட்டுப் போராடும் மக்களோடு இணைந்து வடக்கு – கிழக்கு ஆயர்களாகிய நாம் மே 18ஆம் திகதியை இனப்படுகொலையை நினைவுகூரும் நாளாகவும் செப நாளாகவும் அனுசரிக்கும்படியாக வடக்கு – கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் விநயமாகக் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் இலங்கையில் கடந்த பல தசாப்தங்களாக நடைபெற்ற போரிலும் குழப்பங்களிலும் தமது உயிர்களை இழந்த அனைவரையும் நினைவுகூர்ந்து செபிக்கும்படியாகவும் கேட்டு நிற்கின்றோம்.

அனைத்துப் பங்குத் தந்தையர்களையும், துறவறக் குழுமங்களையும், மத நிறுவனங்களுக்குப் பொறுப்பானவர்களையும் கொரோனா சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எதிர்வரும் மே 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு ஆலயங்களில் மூவேளை செப மணியோசை எழுப்புதல் மக்களைச் செபிக்க அழைத்தல், ஈகைச் சுடர் ஏற்றுதல், இரண்டு நிமிட அக வணக்கம், இறந்தோர், பாதிக்கப்பட்டோர், துன்புறுவோரை நினைத்து மௌன செபம்; மாலை 6.15 – இறந்தோரை நினைவு கூர்ந்து துக்க மணி ஒலித்தல்.

இவ்வேளையில் மக்கள் தங்கள் இல்லங்களில் இருந்தவாறு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செய்யவும் செபிக்கவும் அறிவுறுத்தவும் – என்றுள்ளது.

---

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 60 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 641 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 23 ஆயிரத்து 569 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

---

## இரவில் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலக்கத்தின் அடிப்படையில் நாட்களை ஒதுக்கிக்கொடுப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருந்தபோதிலும் சில சமூக வலைளத் தளங்களில் ஊரடங்கு தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுவிட்டது எனவும், அது தொடர்பில் அரசு இன்று அறிவிக்கும் என்றும் நேற்றிரவு தகவல்கள் பரிமாறப்பட்டன.

---

## யாழில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் ஆயிரத்து 18 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 35 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 6 பேரும், வவுனியா மாவட்டத்தில் 7 பேரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.


புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களிடம் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் 6 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 6 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கும், பூவரசம் குளம் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட 19 பேருக்கும், சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் 14 பேருக்கும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருவரும் என 35 பேருக்குக் கொரோனா நோய்த் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அந்த வகையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கும் , பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 7 பேருக்கும், சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 2 பேருக்கும், கோப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்கும், ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும், தெல்லிப்பழை வைத்திசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த 7 பேருக்கும், வேலணை பிரதேச சுகாதார மருத்துவ பிரிவில் ஒருவருக்கும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும், நல்லூர் மற்றும் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா இருவருக்கும் எனத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது – என்றார்.

# வடக்கில் பாரிய அபிவிருத்திகள் தேவை அதிகாரிகளிடம் டக்ளஸ் வலியுறுத்தினார்



வடக்கு மாகாணத்தில் நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கிலான கலந்துரையாடல் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.

காணொலி ஊடாக கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில், கடந்த ஆட்சியாளர்களின் தவறான அணுகுமுறை காரணமாக கைவிடப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி மீளாய்வு செய்ய வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் இதன்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, பேசாலை, குருநகர் ஆகிய துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறைகள், நங்கூரமிடும் தளங்கள் உட்பட பல்வேறு வேலைத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட பாரிய அபிவிருத்தி திட்டத்துக்கான நிதியுதவியை வழங்குவதற்கு கடந்த ஆட்சிக் காலத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்திருந்தது.

எனினும், அப்போதைய ஆட்சியாளர்களின் தவறான அணுகுமுறை காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கி குறித்த திட்டத்தைக் கைவிடுவதற்குத் தீர்மானித்திருந்தது.

இந்நிலையில், கைவிடப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தை மீளச் செயற்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாக கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சரால் தெளிவுபடுத்தப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த கருத்துக்களை ஏற்றுக்கொண்ட ஆசிய அபிவிருத்திவங்கியின் நிறைவேற்று அதிகாரிகள், குறித்த விடயம் தொடர்பாக ஆராய்வதாக உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறையில் ரஞ்சனுக்கு தனி தொலைக்காட்சி

அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் நான்கு ஆண்டு கடூழிய சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு தனியான தொலைக்காட்சி வழங்கப்பட்டுள்ளது.

அவர் விடுத்த கோரிக்கையை ஆராய்ந்த பின்னர், இந்த வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம் என இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்துள்ளார். அத்துடன் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு தனியான மின் விளக்கு, மெத்தை மற்றும் கழிவறை வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனைத் தவிர ரஞ்சன் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த காலத்தில் அவர் வசித்து வந்த மாதிவல நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பில் உள்ள வீட்டை மேலும் ஆறு மாத காலத்துக்குப் பயன்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தன்னை ஜனாதிபதியின் விசேட மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு, ரஞ்சன் ராமநாயக்க, ஜனாதிபதியிடம் எழுத்துமூலமான கோரிக்கையை விடுத்துள்ளார்.

## கர்ப்பிணித் தாய்மாருக்கும் தடுப்பூசி அவசியம் தேவை

### வைத்தியர் பிரதீப் டி சில்வா தெரிவிப்பு



கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி செலுத்த வேண்டியது அத்தியாவசியமானது என மகப்பேறியல் மற்றும் மகப்பேறு வைத்திய சங்கத் தலைவர் வைத்தியர் பிரதீப் டி சில்வா தெரிவித்தார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொடுப்பதில் எவ்வித சிக்கலும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

அதன்படி, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, கர்ப்பம் தரிக்க எதிர்பார்த்துள்ள பெண்களுக்கு மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு இந்த தடுப்பூசி பொருத்தமானது என நிரூபிக்கப்பட்டுள்ளது என வைத்தியர் மேலும் தெரிவித்தார்.

# கனடாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் கொதித்துப்போயுள்ளது இலங்கை அரசாங்கம்

கனடாவின் ஒன்றாறியோ மாகாண சட்டமன்றத்தில் ஈழத் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகள் ஓர் இனப்படுகொலை என்பதை ஏகமனதாக அங்கீகரித்த நகர்வுக்கு இலங்கை அரசாங்கம் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஒன்றாறியோ மாநில சட்டமன்றத்தின் உறுப்பினர் விஜய் தணிகாசலத்தால் ஒன்றாறியோ சட்டமன்றத்தில் தமிழின அழிப்பு தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட அறிவியற் கிழமைக்கான சட்டமூலம் கடந்த வாரம் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீதான முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 12 ஆம் ஆண்டு நினைவு அடுத்தவாரம் நினைவு கூரப்படவுள்ள நிலையில் கடந்தவாரம் ஒன்றாறியோ மாகாண சட்ட மன்றம் தமிழ் இனப்படுகொலைக் கல்வி வாரம் சட்டத்தை ஏகமனதாக அங்கீகரித்திருந்தது.

தமிழின அழிப்பு இலங்கையில் நடைபெற்றுள்ளது என்பதை அங்கீகரித்து அது சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை இதுவே உலகின் முதலாவது வரலாற்று நிகழ்வாகும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன கடந்த திங்கட்கிழமை கனேடிய உயர் ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னனை தனது பணியகத்துக்கு அழைத்து இந்தவிடயம் தொடர்பான கண்டனத்தை பதிவுசெய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரித்தானிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழர் ஒருவர் வெற்றி பெற்றார்

பிரித்தானியாவில் இடம்பெற்ற பாசிங்ஸ்டோக் மற்றும் டீன் போரோ உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், இலங்கைத் தமிழர் ஒருவர் உள்ளூராட்சி மன்றத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த மூன்று உள்ளூராட்சி மன்றத் தலைவர்களில் ஒருவராக இலங்கைத் தமிழரான ஜெய் கணேஷ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜெய் கணேஷ் சமூகம் சார்ந்த விடயங்களில் மிகவும் ஆர்வம் கொண்டவர். யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் கொழும்பு இந்து கல்லூரியின் பழைய மாணவராவார்.

லண்டன் பெருநகர பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அவர், உள்ளூர் அரசாங்கத்தில் ஒரு தசாப்தத்துக்கும் மேலாகப் பணியாற்றியுள்ளார்.

மேலும் இவர் பாடசாலை நாள்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் (எஸ்.எல்.பி.சி) பகுதிநேரம் பணியாற்றியுள்ளார். இவர் 2012 முதல் கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினராக இருந்து வருகிறார்.

இந்நிலையில், தனது வெற்றி தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர் –

'நான் வாழும் பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமை ஒரு முழுமையான மரியாதையாகும். எனக்கு வாக்களித்த அனைத்துத் தரப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலும், பாசிங்ஸ்டோக் மற்றும் டீன் போரோவை ஒரு சிறந்த இடமாக மாற்ற கடினமாக உழைப்பேன். – எனத் தெரிவித்துள்ளார்.

## மருந்து வகைகளை வீட்டுக்கு அனுப்ப தொலைபேசி எண்கள்

கொரோனா அடையாளம் காணப்பட்ட சில பகுதிகளில் உள்ளவர்களுக்குத் தேவையான மருந்துகளை வீட்டுக்கே விநியோகிக்கும் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்க மருந்தாக்கள் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவுகின்ற கொவிட் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இதன் தலைவர் விசேட வைத்தியர் பிரசன்ன குணசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக சில தொலைபேசி எண்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு 1 இல் உள்ளவர்கள் 0701902740 என்ற இலக்கத்திற்கும், கொழும்பு 4 இல் உள்ளவர்கள் 0701902741 என்ற இலக்கத்திற்கும் மற்றும் கொழும்பு 7 இல் உள்ளவர்கள் 0701902742 என்ற இலக்கத்திற்கும் அழைப்பை மேற்கொண்டு தேவையான மருந்துகள் தொடர்பான விவரங்களைத் தெரிவிக்க முடியும்.

## சுகாதார சட்டங்களை மீறுபவர்களை தூக்கி வாகனங்களில் ஏற்ற வேண்டாம்

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் வரும் நபர்களை கைது செய்யும் போது அவர்களையும் பாதுகாக்க வேண்டும் அதற்காக அவர்களை தூக்கி வாகனங்களில் ஏற்ற வேண்டாம் என மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாரசிங்க பொலிஸாருக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

மட்டக்களப்பில் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு முன் பொலிஸாருக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவுரைகளை வழங்கியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலிஸ் என்ற ரீதியில் முன்னெடுக்கும் கொரோனா சுகாதாரப் பாதுகாப்பு நடவைக்கைகளின் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் முகக்கவசம் அணியாமல் வருபவர்களைக் கைது செய்வதற்கான முழு அதிகாரம் பொலிஸாருக்கு இருக்கின்றது.

எனவே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா மூன்றாவது அலை மிகவும் உக்கிரம் அடைந்து வரும் நிலையில் சுகாதர நடைமுறைகளைப் பேணாதவர்களைக் கைதுசெய்து தனிமை படுத்தல் சடத்தின் மூலம் தனிமைப்படுத்தவும்.

அதேவேளை பொலிஸாரான உங்களையும் பாதுகாத்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் வரும் நபர்களைக் கைதுசெய்யும் போது அவர்களையும் பாதுகாக்க வேண்டும் அதற்காக அவர்களை தூக்கி வாகனங்களில் ஏற்ற வேண்டாம்.

சுகாதார சட்டத்தை மதிப்பவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் அது பொலிஸாரின் கடமை அதே போன்று சுகாதார சட்டத்தை உதாசீனம் செய்பவர்களைக் கைது செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

## பச்சிலைப்பள்ளி தவிசாளரின் கருத்துக்கு மறுப்பு தெரிவித்துள்ளார் அரசாங்க அதிபர்

தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு அரசால் வழங்கப்படும் உதவிகள் உரிய காலப்பகுதிக்குள் கிடைப்பதில்லை என்ற பச்சிலைப்பள்ளி தவிசாளரின் கருத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மறுத்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கடந்த 6 ஆம் திகதி கிளிநொச்சி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்ரமணியம் சுரேன் கருத்து தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான உதவிகள் உரிய காலப்பகுதியில் கிடைப்பதில்லை எனவும், தனிமைப்படுத்தல் காலப்பகுதி நிறைவு பெற்றதன் பின்னரே கிடைக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் தமது பிரதேச சபையால் உதவிகளை அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்கு வழங்கி வருவதாகவும், மாவட்ட செயலகத்தின் இழுபறி நிலையே இதற்குக் காரணம் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் வினவப்பட்டது. அதற்கு பதிலளித்த அரசாங்க அதிபர் –

குறித்த உதவிகள் உரிய காலப்பகுதியில் அவர்களுக்குக் கிடைக்கப்பெறுகின்றன எனவும், தனிமைப்படுத்தப்பட்டவர்களின் விவரம் திரட்டப்பட்டு வழங்கப்பட்டதன் பின்னர் உடனடியாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பில் தமக்கு முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை எனவும், அவ்வாறு கிடைத்தால் அதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உலக மகா சுத்துமாத்து!

கொவிட் பெருந்தொற்று நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் இலங்கைக்கு உரிய தடுப்பூசிகளை வழங்கும் விடயத்தில் கடைசி நேரத்தில் இந்தியாவின் உதவி கிடைக்காமல் போயிற்று.

உரிய நிதியைச் செலுத்தி, தடுப்பூசிக்கான 'ஓடரை' இலங்கை வழங்கியிருந்த போதிலும், அதைப் பெற்று, வாக்களித்த மாதிரி உரிய வேளையில் இந்தியாவின் சீரம் நிறுவனத்தினால் வழங்க முடியாமல் போய்விட்டது.

இந்தியாவில் உள்நாட்டில் திடீரென ஏற்பட்ட பெருந்தொற்றுப் பரவல் நெருக்கடியால் தனது சொந்த மக்களுக்கு வழங்குவதற்கே ரஷ்யா போன்ற நாடுகளில் இருந்து தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கும் அந்நாடு, இலங்கைக்கு வாக்குறுதியளித்தபடி தடுப்பூசிகளை வழங்க முடியாமல் போனமை புரிந்து கொள்ளத்தக்க நெருக்கடியே.

இந்தியா கைவிட்டமையால் வேறு வழியின்றி சீனாவிடம் கையேந்த வேண்டிய நிலைமை கொழும்புக்கு.

அதிலும் பல நன்மைகள் உண்டு. பெருமளவு தடுப்பூசி நன்கொடையாகக் கிடைக்கும். கடனுக்கும் தாராளமாகத் தடுப்பூசியைக் கொள்வனவு செய்யலாம். விடயத்தைக் கையாள்வோருக்கும் வழமைபோல பல 'நன்மைகள்' கிட்டும்.

தடுப்பூசி வழங்கும் விடயத்தில் இந்தியா கைவிட்ட கையோடே சீனாவின் 'சினோபோம்' தடுப்பூசிகள் வந்து இறங்கி விட்டன.

ஆனால், அவற்றை பொதுமக்களுக்கு வழங்குவதில் பெரும் நடைமுறைச் சிக்கல் இருந்தது.

சீனாவின் இந்தத் தடுப்பூசிக்கு இன்னமும் உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகாரம் வழங்கவில்லை. உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகரிக்காத தடுப்பூசியை மக்களுக்கு வழங்கினால் அதனால் பெரும் சட்ட, மருத்துவ, ராஜிக, அரசியல் நெருக்கடிகள் எல்லாம் ஏற்படும்.

உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகரிக்காத தடுப்பூசியை லட்சக் கணக்கில் ஏன் நாட்டுக்குள் கொண்டு வந்தீர்கள் என எதிர்க்கட்சியினரும், மருத்துவத்துறையினரும் ஆரம்பத்தில் பிய்த்தெடுத்தனர். இலங்கையில் இருக்கும் சீனப் பிரஜைகளுக்கு வழங்கவே அவை தருவிக்கப்பட்டன என்று அரசுத் தரப்பில் கதை விடப்பட்டது. அத்தனை லட்சம் சீனப் பிரஜைகள் இங்கு இருக்கின்றார்களா என்று வாயைப் பிளந்து கேள்வி கேட்டமையுடன் மக்களும் அரசியல்வாதிகளும் அடங்கினர்.

எங்கே, உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதியின்றி இலங்கை மக்களுக்கு இந்தத் தடுப்பூசிகளை வழங்கட்டும், பார்ப்போம் என்ற எண்ணத்தில் அவர்கள் பதுங்கினர்.

இதற்கிடையில் – சீனாவின் சினோபோம் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி கிடைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. அதையடுத்து அதனைப் பொதுமக்களுக்கு வழங்கும் நடவடிக்கையும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

அந்த அனுமதி தொடர்பில்தான் இப்போது பெரும் சர்ச்சை வெடித்திருக்கின்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் டெட்ரோஸ் அட்ஹனோம் கிப்ரியெஸாஸுடன் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 'சூம்' மூலம் முதல் நாள் நடத்திய பேச்சின் பயனாக சீனத் தடுப்பூசிக்கான அனுமதி கிடைத்துள்ளது என்று அடுத்த நாள் ஜனாதிபதியின் பேச்சாளர் கிங்ஸிலி ரட்ணாயக்கா கூறியமையே சர்ச்சைக்குக் காரணம். சினோபோம் தடுப்பூசிகளை அவசரத்துக்குப் பயன்படுத்துவதற்கு இலங்கைக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அவசரப்பட்டு அனுமதி கொடுத்தமைக்கு இலங்கை ஜனாதிபதி முறையற்ற விதத்தில் அழுத்தம் பிரயோகித்தமையே காரணம் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி உரையாடி அடுத்த நாளே அனுமதி கொடுத்தமைக்கு முறையற்ற அரசியல் அழுத்தமே காரணம் என்பது குற்றம் சுமத்துபவர்களின் வாதம். அதனை உலக சுகாதார ஸ்தாபனம் மறுத்துள்ளது.

வழமையாக வழங்கப்படும் தரவுகளின் விவரம், தரம் ஆகியவற்றைப் பொறுத்து இத்தகைய அவசரப் பயன்பாட்டுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கும் விடயம் பூர்த்தியாவதற்கு இரண்டு முதல் மூன்று மாதங்கள் செல்லும். தடுப்பூசி உற்பத்தியாளர்களின் தரவுகள், முன்நிபந்தனைகளை நிறைவு செய்தல் போன்றவற்றால் இந்தக் காலக்கெடு மேலும் நீளலாம்.

*"சீனாவின் சினோபோம் தடுப்பூசியை இலங்கை பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கியிருந்தது.*

*"நாடுகள் தமது தேசிய விதிகள் மற்றும் சட்டங்களுக்கு ஏற்ப எந்த சுகாதாரத் தயாரிப்புக்கும் தமது நாட்டில் பாவனைக்கான அவசர கால அனுமதி வழங்க சுய அதிகாரம் கொண்டவை.*

*"அத்தகைய வகையில், உள்நாட்டில் அந்த நாட்டின் தீர்மானத்துக்கு அமைய அவசர தேவைக்கு அந்த நாடு [இலங்கை தானே] தீர்மானித்துப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. அது உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கும் அனுமதிக்கு உட்பட்ட விடயம் அல்ல"* – என்று தெளிவுபடுத்தியுள்ளது உலக சுகாதார ஸ்தாபனம்.

அப்படியானால் சீனத் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி என்ற செய்தியே முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் சுத்துமாத்து என்பது தெளிவாகின்றது அல்லவா?

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு ஒன்று கூடுவோர் கைது செய்யப்படுவர்

## இராணுவத் தளபதி முன்னெச்சரிக்கை



நாட்டில் கொவிட் வைரஸ் தீவிரம் அடைந்துள்ள நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதற்காக முள்ளிவாய்க்கால் மண்ணில் மக்கள் அரசியல்வாதிகள் என்று எவர் ஒன்றுகூடினாலும் அனைவரும் கூண்டோடு கைது செய்யப்படுவார்கள் என அவர் எச்சரித்துள்ளார்.

கொவிட் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு விடயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. கடந்த 3 ஆம் திகதியிலிருந்து அரச மற்றும் தனியார் நிகழ்வுகள் மற்றும் நயினாதீவில் இடம்பெறவிருந்த வெசாக் நிகழ்வுகளும் நிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் கொவிட் கட்டுப்பாட்டுக்காக விசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது.

நினைவுகூரலுக்கு மக்கள் முள்ளிவாய்க்காலில் ஒன்றுகூடினால் அரசில்வாதிகள் மக்கள் என்ற வேறுபாடு இல்லாது கைது செய்யப்படுவார்கள். இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையை நாம் மறுக்கவில்லை. வீடுகளில் தனித்து அதனைச் செய்வதில் எமக்கு ஆட்சேபனையில்லை என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

# போஷாக்கு குறைவான பிள்ளைகளுக்கு கோறளைப்பற்றில் மருத்துவ உதவிகள்





கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தால் நோயால் பாதிக்கப்பட்டு தொடர்ந்து மருத்துவ சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு செல்லும் போஷாக்கு குறைவான பிள்ளைகளுக்கு மருத்துவ உதவி கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு, பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலாளர் சு.ஹரன் தலைமையில் நடைபெற்றிருந்தது.

இதன்போது, நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தால் நோயால் பாதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு செல்லும் போஷாக்கு குறைவான பிள்ளைகளுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் 20 பேருக்கு மருத்துவ உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய கொவிட் – 19 அச்சுறுத்தல் காலப்பகுதியில் வைத்தியசாலைக்குச் செல்வதில் பயண சிரமங்களை எதிர்கொள்ளும் மக்களுக்கு இந்தக் கொடுப்பனவு உதவியாக அமைந்திருக்குமென செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் அ.அழகுராஜ் தெரிவித்துள்ளார்.

இதில், நிர்வாக உத்தியோகத்தர், உளநல உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ள 'இடுகம' நிதி!

கொவிட் -19 (இடுகம) சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் தற்போதுள்ள ரூ.1,360,922,969.24 இருப்பு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 1,752,402,793.24 ஆகும். இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ .391,479,824.00. இது சேகரிக்கப்பட்ட மொத்த தொகையில் 23 வீதம் ஆகும்.

நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 1,752,402,793.24.

நிதியின் தற்போதைய இருப்பு ரூ. 1,360,922,969.24

தடுப்பூசிகளுக்கு அரசாங்கம் செலவிட எதிர்பார்க்கும் தொகையுடன் ஒப்பிடும் போது மீதமுள்ள இருப்பு மிகவும் சிறிய தொகையாகும். எனினும் நிதியத்தின் இருப்பை தடுப்பூசிக்குப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை இந்த நிதியத்தின் முகாமைத்துவ சபை சுட்டிக் காட்டியுள்ளது.

நிதியத்தின் பணம் செலவிடப்பட்ட விதம் பின்வருமாறு.

தொற்றுநோய் நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்

பி.சி.ஆர். சோதனை தொடர்பான செலவுகள் ரூ.42,605,812.00

விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூ. 67,543,967.00

தனிமைப்படுத்தலுடன் தொடர்புடைய செலவுகள் – ரூ. 38,031,065.00

நிர்வாக செலவுகள் – 3,000.00

மொத்தம் ரூ. 391,479,824.00

செலுத்த வேண்டியவை

தடுப்பூசி ஏற்றல் தொடர்பான செலவுகள் ரூ. 41,545,980.00

10 அம்புலன்ஸ் வண்டிகள் கொள்வனவிற்கு ரூ. 194,000,000.00

ஐ.சி.யூ. படுக்கைகள் கொள்வனவு – ரூ. 7,750,000.00

செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய மொத்த செலவு ரூ. 391,479,824.00

இந்த செலவுகள் அனைத்தும் சுகாதார அமைச்சு மற்றும் இராணுவத் தலைமையகம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொதுமக்கள், பல உள்நாட்டு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் சிலர் இடுகம கொவிட் நிதியத்திற்கு பணத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். கொவிட் -19 நிதிக்கு சர்வதேச நிதி நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் பங்களிக்கவில்லை

சர்வதேச சட்டத்தின் படி, வெளிநாட்டு உதவி மற்றும் நன்கொடைகள் திறைசேரிக்கே வழங்கப்படுகின்றன. இந்த நிதியத்திற்கும் சர்வதேச அமைப்புகளின் நன்கொடைகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை. கொவிட் 19 நிதியத்திற்கு 2020 ஆம் ஆண்டில் அதிகமான பொதுமக்களால் நன்கொடைகள் கிடைக்கப் பெற்ற போதும், 2021 ஏப்ரல் மாதம் வரை கிடைக்கப் பெற்ற சராசரி மாத நன்கொடை சுமார் ரூ .70 லட்சம் ஆகும். இது தொடர்பாக பல்வேறு ஊடகங்களில் பரவிய தகவல்கள் உண்மையல்ல என்றும் 2020 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வுக்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும் நிதியத்தின் முகாமைத்துவ சபை தெரிவித்துள்ளது.



# பரிவினால் பாரினில் பரிமளிக்கும் பாங்குடை தாதியர் தினம் இன்று



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக்கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா)

"தாதியர்கள் அலட்சியமாய், பொறுப்பற்று இருப்பதை விளக்கேந்திய சீமாட்டி வெறுத்தார். மருத்துவர்களுக்கு வலது கையாக வும், நோயாளர்களுக்கு அன்பானவர்களாகவும் , பல கோணங்களில் உதவும் நிலையில் தாதியர்கள் இருக்க வேண்டும். பொறுமையும் சகிப்புத்தன்மையுமே இச் சேவையில் ஈடுபடுவோருக்கு மிக மிக அவசியமாய் இருக்க வேண்டும் என்றும் அவர் கருதினார்.

வாழ்கையில் வசதியாய் வாழ்வதற்கு நல்ல வேலை ஒன்று கிடைக்க வேண்டும் என்று விரும்புவது எல்லோரதும் இயல்பு. அப்படிக் கிடைக்கும் வேலையில் நல்ல ஓய்வு கிடைக்க வேண்டும். மன உளைச்சல் தருகின்ற வேலையாக இருக்கக் கூடாது. வேலைக்குப் போனால் மன நிறைவாய், மகிழ்ச்சியாய், எந்தவொரு சங்கடமும் இல்லாமல் வீட்டுக்கு வரும் வண்ணமான வேலையாக இருக்க வேண்டும். இப்படித்தான் பெரும் பாலானவர்களின் விருப்பமும் சிந்தனையும் அமைந்திருக்கின்றன என்பது நிதர்சனமாகும். ஆனால் சில வேலைகள் அப்படி அமைந்து விடுவதில்லை. அப்படியான வேலைகளை ஏற்றுக்கொண்டு பொறுமையென்னும் நகையணிந்து, புன்னகை என்னும் நன்னகை அணிந்து, அன்பாய், அரவணைப்பாய், ஆறுதலாய், பக்குவமாய் ஆத்மார்த்தமாய் தொழிலென்று எண்ணாமல் தூய பணியினை ஆற்றுகின்றவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் ஆற்றும் பணி தான் 'தாதியர்' பணியாகும். தாதியர் பணிஎன்பதுதொழிலல்ல!அதுஉன்னதசேவையேயாகும். அப்படி உன்னதப் பணியினை ஆற்றி வருகின்ற அந்தத் தொண்டு உள்ளங்களை – அனைவரும் நினைத்துப் பார்த்திடுவது என்பது மனிதாபிமான புனித நிலையாகும்.

மே எட்டாம் நாள் உதவிக்கரங்கொடுக்கும் உன்னத நாளாய் அமைந்தது. மே பன்னிரெண்டாம் நாள் அரவணைத்து ஆறுதல் நல்கும் தாதியர் தினமாய் மலர்கிறது. மே ஒன்று உழைக்கும் கைகளின் ஒற்றுமையினை வெளிப்படுத்தும் நாளாய் ஒளிர்ந்தது. மே மாதம் என்றாலே சமுதாயச் சிந்தனை நிறைந்த மாதமாக அமைகிறது என்பதை கருத்திருத்துவது நன்றெனக் கருதுகிறேன்.

தாதியர் சேவை தரமற்ற சேவை. தாதியர் சேவை வறியவர்க்கும் எளியவர்க்கும் உரிய சேவை. தாதியர் சேவை என்றாலே அருவருப்பு நிறைந்த அசிங்கமான சேவை என்றெல்லாம் பல கருத்துக்கள் இருந்த கால கட்டத்தில் – தாதியர் சேவையினைத் தனது வாழ்வின் குறிக்கோளாய் ஒருவர் தேர்ந்தெடுத்தார். அவர்தான் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இத்தாலியில் பிறந்த புளோரன்ஸ் நைட்டிங்கேல் அதாவது விளக்கேந்திய சீமாட்டி.

மே மாதம் பன்னிரெண்டாம் திகதி ஆயிரத்து எண்ணூற்று இருபதில் இப்பெருமாட்டி – சேவை செய்ய வேண்டும் என்னும் இறைவனின் விருப்பினால் இம்மண்ணுலகில் கால் பதிக்கின்றார். நல்ல நோக்கத்தைக் கருவில் சுமந்து அவர் மண்ணில் கால் பதித்த தினமே உலக தாதியர் தினமாய் கௌரவமாய் கொண்டாடிப் போற்றப்பட்டு வருகிறது.

செல்வமிக்க குடும்பத்தில் பிறந்தாலும் – செல்வத்தில் சிக்கித் தவிக்க விருப்பமின்றி வேதனைப்படுவோர் பக்கமே சென்று அவர்களுக்குப் பணி செய்யும் மகத்தான தாதியர் பணியை மனதில் பதித்து அதன் வழியில் பயணப்படத் தொடங்கினார். தேர்ந்தெடுத்த பணி பல சிரமங்கள் நிறைந்த பணி. பெற்றவர்கள் இவரின் ஆசையை ஏற்றுக் கொள்ளவே இல்லை. ஆனாலும் இறைவன் தனக்கு இப்படித்தான் நட என்று விதித்தான்அவர் உணர்வு உணர்த்திய நிலையில் அவர் தாதியர் சேவையைத் தலையாய சேவையாய் ஏற்று தன்னால் இயன்ற வரை பணியாற்றி நின்றார்.

பெண்கள் நிலையில் இவரின் இந்தச் சிந்தனையும் செயற்பாடும் புரட்சி மிக்கது எனலாம். யாருக்கும் அஞ்சாது துணிவுடன் தாதி யராய் பெண்கள் களத்தில் இறங்கிட விளக்கேந்திய சீமாட்டியாய் இவரே முதலில் வந்து நிற்கிறார் என்பதுதான் இவரை இன்றும் நினைப்பதற்கும், கொண்டாடிப் போற்றி மகிழ்வதற்கும் காரணமாய் இருக்கிறது.

இவர் கண்ணால் பார்த்த காட்சிகள், இவர் மனதில் பதிந்த சம்பவங்கள் யாவும் இவரைப் பலவகைகளில் சிந்திக்கச் செய்தன. அந்தச் சிந்தனைகளினால் இவரின் தாதியர் சேவை உயர்ந்து விளங்கும் நிலைக்குச் சென்றது என்பதும் நோக்கத்தக்கது. ரஷ்யப் பேரரசு, பிரான்ஸ், ஐக்கிய இராஜ்ஜியம், ஒட்டோமன் ஆகிய பேரரசுகளுக்கு இடையே 1854 தொடக்கம் 1856 ஆம் ஆண்டு வரை கிரிமியன் போர் நடைபெற்றது.இப்போரினால் தாக்கமுற்று சரியான கவனிப்பார் அற்ற நிலையில் இருந்த படைவீரர்களுக்கு தாமாகவே முன்வந்து – தான்



பயிற்றுவித்த முப்பத்து எட்டுத் தாதியருடன் தனது சிறிய தாயாரையும் இணைத்து களத்தில் சென்று துணிவுடன் தன்னுடைய பணியை ஆற்றினார். இப்பணியினால் விளக்கேந்திய சீமாட்டி புகழ் பிரகாசிக்கத் தொடங்கியது. கிரிமியன் போர் என்பது இவரின் வாழ்க்கைப் பாதையில் ஒரு முக்கிய திருப்புமுனை.

வறியவர்கள்தான் தாதியர் ஆக வேண்டும். தாதியர்கள் சமையல் ஆள்களாகவும் வேலை செய்ய வேண்டும் என்னும் கருத்தையெல்லாம் இவர் உடைத் தெறிந்தார். வறியவர்களிடத்து இவர் மிகவும் கருணை காட்டினார். அவர்களின் நலனில் பெரிதும் அக்கறையும் செலுத்தினார். வறியவர் வாழ்வினுக்கு வலக்கரமாயும் விளங்கினார். லண்டன் மாநகரில் இயங்கிய ஆதரவற்றோர் விடுதியில் இவர் கேள்வியுற்ற சம்பவம் இவருக்கு பல சிந்தனைகளுக்கு வழி சமைக்க உதவி யது. வறியவர் ஒருவர் இறந்துவிடுகிறார். இதனால் அங்கு பெருஞ் சிக்கலே உருவாகிறது. இந்த நிலையில்



இவ்வம்மையாரின் கவனம் அங்கு செல்கிறது. மருத்துவ வசதி சிறப்பாய் அமையாமையே காரணம் என்பதை உணர்ந்த அவர் – ஆதரவற்றவருக்கு உரிய மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், வறியவருக்கான சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் தனது மனப்பதிவை நிலைநாட்டும் வகையில் செயற்பட்டு நின்றார்.

தாதியர்கள் அலட்சியமாய், பொறுப்பற்று இருப்பதை அவர் வெறுத்தார். மருத்துவர்களுக்கு வலது கையாகவும், நோயாளர்களுக்கு அன்பானவர்களாகவும் , பல கோணங்களில் உதவும் நிலையில் தாதியர்கள் இருக்க வேண்டும். பொறுமையும் சகிப்புத்தன்மையுமே இச் சேவையில் ஈடுபடுவோருக்கு மிக மிக அவசியமாய் இருக்க வேண்டும் என்றும் அவர் கருதினார். அதன் அடிப்படையிலே தான் அவரின் ஒவ்வொரு நடவடிக்கையும் அமைந்திருந்தன. நோய்கள் பரவுவதற்குக்காரணம் சூழல் தூய்மை இன்மையே என்று அவர் கருதினார். மருத்துவமனைகள் , அங்கிருக்கும் மருத்துவக் கருவிகள் அனைத்தும் சுத்தமாய் இருக்கவேண்டும் என்பது இவரின் கட்டாயமான நிலையாக இருந்தது. அதன் வழியில் இவரின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

புளோரன்ஸ் அம்மையார் சிறந்த எழுத்தாளராகவும், புள்ளிவிவரவியல் ஆளுமை உடையவராகவும் விளங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் கிராமப்புறச் சுகாதாரம் பற்றியும் சிந்தித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் இந்த இங்கிலாந்துப் பெண்மணியின் எண்ணம் பரந்துபட்டு இருந்திருக்கிறது என்பது புலனாகிறது அல்லவா? இதுதான் தாதியர் சேவையாகும். தாதியர் சேவை என்பது இனம் கடந்து, மொழி கடந்து, நிறம் கடந்து, சாதியம் தவிர்த்து, மதம் கடந்து, தராதரம் கடந்து, மனித நேயத்தை மட்டுமே முக்கியத்துவப் படுத்தி நிற்பது என்பதை இது உணர்த்து கிறது அல்லவா !

'மருத்துவ வசதிகளுக்கும் சுகாதார நுட்பங்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த மருத்துவமனைகள் பற்றிய குறிப்புகள் , தாதியர் பற்றிய குறிப்புகள் என்னும் நூல்கள் அக்காலத்தில் தாதியர்களுக்கான மிகச் சிறந்த நூல்களாகக் கருதப் பட்டன. உடல் நலத்தைப் பாதிக்கும் விடயங்கள், பிரித்தானிய இராணுவத்தின் மருத்துவமனை நிர்வாகமும் செயல் திறனும் என்பவை இவரால் எழுதப்பட்ட நூல்களில் குறிப்பிடத்தக்கவை.

இவரால் எழுதப்பட்ட 'தாதியற் குறிப்புகள்' என்னும் புத்தகம் தாதியர் பயிற்சிக் கூடங்களின் பாடத் திட்டத்தில் முக்கிய பகுதியாய் இடம்பெற்றிருக்கிறது. அது மாத்திரமன்றி தாதியியலுக்கான நல்ல ஒரு அறிமுக நூலாகவும் இது விளங்குகிறது. மருத்துவமனைத் திட்டமிடலிலும் இவரின் கருத்துகள் முன்னோடியாய் இருக்கின்றன. தாதியருக்கென்று முதன்முதலாக பயிற்சிப் பாடசாலையினைத் தோற்றுவித்த பெருமையையும் இவருக்கே உரித்தானதாகும். இவரின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் நடந்த கூட்டத்தில் தாதியர் பயிற்சிக்காக புளோரன்ஸ் நைட்டிங்கேல் நிதியம் நிறுவப்பட்டது. இந்த நிதியத்துக்குக் கிடைத்த நிதியைக் கொண்டு நைட்டிங்கேல் பயிற்சிப்பாடசாலை 1860 ஜுலை 9 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டது.

விக்டோரியா அரசியினால் இவருக்கு அரச செஞ்சிலுவைச்சங்க விருது 1883 இல் வழங்கப்பட்டது. 'ஓர்டர் ஒவ் மெரிட்" விருதினை 1907 இல் பெற்றுக் கொண்டார். இவ்விருதினைப் பெற்ற முதல் பெண்மணியாயும் இவரே விளங்குகின்றார். விக்டோரியா மகாராணியாருக்கு அடுத்த நிலையில் பேசப்படும் பெண்ணாக புளோரன்ஸ் நைட்டிங்கேல் சமூகத்தில் உயந்த நிலையில் கவனிக்கப்பட்டார் என்பது அவரின் தாதியர் பணியின் செயற்பாட்டால் கிடைத்தது. நவீன தாதியியல் முறையினை உருவாக்கியவர் என்னும் பெருமையினை புளோரன்ஸ் அம்மையார் பெறுகிறார்.லண்டனில் வெஸ்ட்மினிஸ்ரர் அபேயில் இருக்கின்ற தாதியர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அங்குள்ள மாளிகையில் உள்ள விளக்குகள் ஏற்றப்பட்டு – வருகைதருகின்ற தாதியர்கள் ஒவ்வொரு வராலும் கைமாறப்பட்டு அங்கிருக்கும் உயர்வான பீடத்தில் வைக்கப்படும். இவ்வாறு செய்வதன் அர்த்தம் ஒரு தாதியிட மிருந்து மற்றத் தாதியருக்கு தமது அறிவினைப் பரிமாறுவதாகக் கருதும் குறியீடு எனலாம். இந்த நாள் விளக்கேந்திய சீமாட்டி என அழைக்கப்படும் புளோ ரன்ஸ் நைட்டிங்கேல் அம் மையார் அவர்கள் பிறந்த மே பன்னிரெண்டாம் நாளாகும்.

## கைக்கு எட்டும் தூரத்தில்

# அழிவை நோக்கும் வனவிலங்குகள்!

முன்சி பஸ்றி



இயற்கைச் சூழலில் தானாக வளரும் அனைத்து உயிரினங்களும் வன உயிரினங்கள் எனலாம். வீட்டில் வளர்க்கும் பிராணிகள், கால்நடைகள், உணவுக்காக வளர்க்கப்படும் பயிர்கள் தவிர்ந்த மற்றைய அனைத்து தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிர்கள் ஆகியவற்றை வன உயிரினங்கள் எனப் பொதுவாக அழைக்கின்றோம். இவற்றில் பல வன விலங்குகள் அழிவை நோக்கிப் பயணிக்கின்றன.

இவ்வுலகில் பல விலங்குகள் வாழ்ந்து அழிந்த பின்னர் அதன் எச்சங்களைக் கண்டுபிடித்து இவ்வாறான உயிரினங்கள் வாழ்ந்ததாக உலகம் அறிந்தது அதிலும் எத்தனை விலங்குகள் உலக கண்ணுக்குப் புலப்படவில்லையோ தெரியவில்லை. இருப்பினும் சமகாலங்களில் பல வன விலங்குகள் வேகமாக அழிந்து கொண்டு வருகின்றன. அவற்றில் நாம் சிலவற்றை நோக்கலாம்.

அந்தவகையில் கடந்த 2018ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி இந்த உலகில் இருந்த ஒரே ஒரு கடைசி வெள்ளை ஆண் காண்டாமிருகம் உயிரிழந்தது. 45 வயதான அந்தக் காண்டாமிருகம் தனது வயது மூப்பின் காரணமாக உயிர் இழந்து விட்டது. ஆனால், அதிர்ஷ்டவசமாக ஒரு பெண் குட்டியும் அந்தப் பெண் குட்டிக்கு இன்னும் ஒரு பெண் குட்டியும் உள்ளது. அதாவது இறந்துபோன காண்டாமிருகத்தின் மகளும் பேத்தியும் உள்ளனர். இந்த இனத்தைப் பெருக்குவதற்காக விஞ்ஞானத்தின் உதவியுடன் வெள்ளை ஆண் காண்டாமிருகம் உருவாக்க முடியும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆனால், எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்பது கேள்வியே.

மேலும், அமுர் சிறுத்தைகள் – ரஷ்யாவின்



கிழக்குப் பகுதியில் ஓடும் நதியான அமுரின் படுக்கையில் அதிகமாகக் காணப்பட்ட இந்தச் சிறுத்தை இனமானது மணிக்கு 37 மைல் வேகத்தில் ஓடக்கூடியது. இதனால் 17அடி உயரம் வரை தாண்ட முடியும்.

கடந்த 2015ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் மொத்தமாக 60 சிறுத்தைகள் மாத்திரமே இருக்கின்றன. இவை சிறுத்தைப் பாதுகாப்பு பூங்கா ஒன்றில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறே ஆபிரிக்காவில் மட்டுமே வசிக்கும் ஒரு

> வனவிலங்குகள் அழியும்போது அது இயற்கைக்குப் பெரும் நாசப் பாதையை உருவாக்குகின்றது. இயற்கையில் ஒரு சிற்றினம் அழியும்போது அல்லது அதன் எண்ணிக்கை குறையும்போது சூழல் சமநிலை பாரிய அளவு பாதிக்கப்படும்.

வகை கொரில்லாக்கள் காணப்பட்டன. இவை ஆபிரிக்க மலை கொரில்லாக்கள் என அழைக்கப்படுகின்றன. காங்கோ, உகாண்டா போன்ற நாடுகளில் உள்ள தேசியப் பூங்காக்களில் மட்டுமே இவை தற்போது உள்ளன. இன்று உலக அளவில் 900 எண்ணிக்கையான கொரில்லாக்கள் மாத்திரமே காணப்படுகின்றன.



இவ்வாறு அழிந்து போகும் வன விலங்குகளில் ஹாவ்க்ஸ்பில் கடல் ஆமைகளும் அடங்கும். உலகில் பெரும்பான்மை வெப்பமண்டல கடற்பகுதியில் வாழும் ஆமைகள் அதன் வண்ணமயமான ஓட்டுக்காக வேட்டையாடப்படுகின்றன. கடந்த நூற்றாண்டில் மட்டுமே சுமார் 80 வீத ஆகஸ்டில் ஆமைகள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

மேலும் அவற்றின் இறைச்சி மற்றும் முட்டைக்காக இதனை நாடுகின்றனர். சமகாலத்தில் 20 வீத ஆமைகள் மாத்திரமே காணப்படுகின்றன.

தென்சீனப் புலி எனப்படும் புலி இனமானது தென்சீனாவில் உள்ள காடுகளில் மட்டுமே வசிக்கும். 1950ஆம் ஆண்டில் சீனாவில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி 4 ஆயிரமாக இருந்த புலிகள் அடுத்த 5 ஆண்டுகளில் 3 ஆயிரத்து 80ஆக குறைந்தன. பின்னர் 1979ஆம் ஆண்டில் இவற்றைப் பாதுகாக்கும் நோக்கில் அரசு சட்டம் இயற்றியுள்ளது. புலிகளை வேட்டையாடுவது குறைக்கப்பட்ட போதிலும் 2016ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 100 புலிகளே எஞ்சியுள்ளன.

டொல்பின்கள் இனத்தைச் சேர்ந்த வகுய்டா எனும் மீன் ஆனது கலிபோனியா வளைகுடாவில் அதிகம் இருந்த அரிய வகை உயிரினம் ஆகும். 1958இல் தான் இப்படி ஒரு உயிரினம் இருந்ததே வெளியுலகத்துக்கு தெரியவந்தது. இதன் அழிவுக்கு வெப்பமயமாதல் மற்றும் காலநிலை மாற்றமும்தான் காரணம் என வன விலங்குகள் பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது. இந்த உயிரினத்தின் மொத்த எண்ணிக்கையில் 92 வீதம் அழிந்து விட்டதாக 1997ஆம் ஆண்டு கணக்கெடுப்பு தெரிவிக்கின்றது.

இவை மட்டுமன்றி இன்னும் பல வனவிலங்குகள் அழிவை நோக்கி நகர்கின்றன. கொம்புள்ள காட்டுமாடு, சீனாவின் யாங்க்ட்சே ஆற்றில் வாழும் ஒரு வகை டொல்பின், சுமந்திரன் உரங்குட்டான், பிலிப்பைன்ஸ் முதலை, வரகுக் கோழி, ஹார்லாக் கிப்பன் குரங்கு, ஆசிய யானை, ஆசிய சிங்கம், சிவிங்கிப்புலி, நாற்கொம்பு மான், டிங்கோ நாய், வெள்ளைத் திமிங்கிலம், சாரசு கொக்கு, சோக மீன் ஆகியன இவ்வாறு அழிந்துபோகும் வனவிலங்கு எனும் பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது.


இனி வரும் காலங்களிலும் அழிந்து வரும் விலங்குகளின் எண்ணிக்கையை அதிகரித்து வாழும் விலங்குகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகும் எனத் தெரிகின்றது. இவ்வாறு வனவிலங்குகள் அழியும்போது அது இயற்கைக்குப் பெரும் நாசப் பாதையை உருவாக்குகின்றது.

இயற்கையில் ஒரு சிற்றினம் அழியும்போது அல்லது அதன் எண்ணிக்கை குறையும்போது சூழல் சமநிலை பாரிய அளவு பாதிக்கப்படும். இதற்குக் காரணம் உணவுச் சங்கிலியும் உணவு வலையும் சீர்றுப் போவதாகும்.

இன்றைய சனத்தொகைப் பெருக்கத்தாலும், மனிதர்களின் தேவை காரணமாகவும், காலநிலை மாற்றத்தாலும் வனவிலங்குகள் அழிந்து வருகின்றன. இருப்பினும் இதன் அழிவுக்கு மிக முக்கிய காரணியாக அமைவது மனிதர்களே.

தனக்கு ஏற்றவாறு தனது சூழலை மாற்றிக் கொள்வதற்காக மனிதர்கள் காடுகளை அழித்து – உயிரினங்களை அழித்து பஞ்சபூதங்களை அநாதை ஆக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இன்று மனிதனே மனிதனை அழிக்கும் நிலை வருகின்றது. எதிர்வரும் காலங்களில் மனிதனும் வேகமாக அழிந்து வரும் உயிரினங்களின் பட்டியலில் அடங்கிவிடலாம்.

வனவிலங்குகள் அனைவராலும் பாதுகாக்கப்பட வேண்டியவை. இந்த விழிப்புணர்வு அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக ஒக்டோபர் 4ஆம் திகதி உலக வனவிலங்கு தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. உலகில் உள்ள அனைத்து உயிரினங்களையும் பாதுகாப்பதில் அரசு மட்டுமன்றி அனைத்து மக்களும் ஒத்துழைத்து அரசு விதிக்கும் சட்டங்களுக்கும் அடிபணிந்து நடக்க வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து சூழல் சமநிலையைப் பேணுவோம்.



# இணையக் கல்வியினை வழங்குமாறு கல்வியமைச்சு அழுத்தம் கொடுக்கிறது

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

தொற்றுநோய் பரவலால் ஸ்தம்பிதமடைந்துள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு எந்தவொரு பயனுள்ள ஏற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என நாட்டின் முன்னணி ஆசிரியர் சங்கங்களில் ஒன்று குற்றம் சாட்டியுள்ளது.

இதற்கு பதிலாகத் தோல்வியுற்ற இணையவழி கல்வியை வழங்க அரசாங்கம் பல்வேறு வழிகளில் ஆசிரியர்களுக்கு அழுத்தம் கொடுப்பதாக, இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது, கல்வி அமைச்சு, மாகாண கல்வி அதிகாரிகள் மற்றும் அதிபர்களின் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளது.' பாடசாலை கல்வி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கும்வரை, ஆசிரியர்கள் தோல்வியுற்ற இணையவழி கற்றல் முறையைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றமை துரதிர்ஷ்டவசமானது என சுட்டிக்காட்டியுள்ள, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இணையவழி கல்வி தோல்வி என்பதை, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவும் ஒப்புக்கொண்டுள்ளார் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தோல்வியடைந்த திட்டமென தெரிந்தும், ஆசிரியர்களை அதனை செய்யும்படி கட்டாயப்படுத்துவது கல்வி அதிகாரிகளின் ஒரே கொள்கையாக மாறியுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கும் வரை முறையான அட்டவணை மூலம் தொலைக்காட்சியைப் பயன்படுத்தி கல்வியை வழங்குவது ஒரு நடைமுறைத் சாத்தியமான திட்டமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஊடக நிறுவனங்களின் தலைவர்களை வரவழைத்து இதற்கான திட்டத்தை வகுப்பது கல்வி அதிகாரிகளின் பொறுப்பாகும். கொவிட்-19 தொற்றுநோய் நாட்டில் பரவியுள்ள நிலையில், 4.3 மில்லியன் பாடசாலை மாணவர்களின் கல்வி ஸ்தம்பித்துள்ளதோடு, மேலும் பாடசாலைகள் காலவரையின்றி மூடப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு முன்னர் மாணவர்களுக்கு தரமான முகக்கவசங்களை வழங்குதல் உள்ளிட்ட பாடசாலைகளுக்கென ஒரு சுகாதாரத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் எனவும், எனினும், இந்த நோக்கத்துக்காக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய அரசாங்கம், 54.70 பில்லியன் ரூபா செலவில் ருவன்புர அதிவேக வீதியை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதோடு, 625 மில்லியன் ரூபாய் செலவில் 500 உடற்பயிற்சி மையங்களை அமைக்கவும் விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஆசிரியர் சங்கம் விமர்சித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில், இதுபோன்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி செலவிடுவதற்கு முன்னர், கொவிட்-19 தொற்றைக் கட்டுப்படுத்தத் தேவையான தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் கூறியுள்ளது.

தடுப்பூசி வழங்கலில்போது முன்னுரிமை அளிக்க வேண்டிய ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு மீண்டும் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னர் தடுப்பூசியை வழங்குவது அவசியமான விடயம் என அந்த சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பேராதெனிய பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்திய கழுவி பயன்படுத்தக்கூடிய நனோ தொழில்நுட்பத்துடன் கூடிய முகக்கவசங்களை இலவசமாக வழங்குதல், பாடசாலைகளுக்கு சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், பாடசாலைகளுக்கு போதுமான கிருமிநாசினிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்கு நிதி உதவி வழங்கும் விடயத்தில் முன்னுரிமைளித்து செயற்பட வேண்டும் - என இலங்கை ஆசிரியர் சங்கம் ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பாக வைத்திய நிபுணர்கள் மற்றும் கல்வித்துறை அதிகாரிகளுடன் இன்று புதன்கிழமை கலந்துரையாடலை நடத்தவுள்ளதாக, அநுராதபுரத்தில் பௌத்த பிக்குகளை சந்தித்த பின்னர், கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## இந்த மாதம் இதுவரையில் 20 ஆயிரம் தொற்றாளர்கள்

இம்மாதம் முதலாம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

அதன்படி இம்மாதம் முதலாம் திகதி முதல் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 6 மணிவரையான காலப் பகுதியில் 20 ஆயிரத்து 384 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இவற்றில் கொழும்பு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கை யிலான அதாவது 4 ஆயிரத்து 567 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் கம்பஹாவில் 3 ஆயிரத்து 790 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## சினோபோம் தடுப்பூசி இலங்கையில் தயாரிப்பு?

சீனாவின் தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசியை இலங்கையில் உற்பத்தி செய்வது தொடர்பில் சீன நிறுவனத்துடன் இலங்கை பிரதிநிதிகள் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கை முன்வைத்துள்ள யோசனைக்கு சீனாவால் சாதகமான பதில் கிடைக்கப் பெற்றிருப்பதாக இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் மிகவும் சாதகமாக அமையும் எனவும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெவ்வேறு தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளலாமாம்

வெவ்வேறு தடுப்பூசிகளை செலுத்திக்கொள்வதால் எந்தவிதமான பாதகமான விளைவுகளும் ஏற்படவில்லை என தடுப்பூசி நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், இந்த விடயம் தொடர்பாக நாட்டில் உள்ள வைத்திய நிபுணர்கள் இறுதி முடிவை எடுப்பார்கள் என்றும் கூறினார்.

எனவே, தடுப்பூசியின் முதலாவது டோஸை பெற்றுக்கொண்டவர்கள் தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெறுவதில் அச்சம் அல்லது சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை இரண்டாவது டோஸ் செலுத்திக்கொள்ளத் தேவையான அஸ்ட்ராசெனெகா தடுப்பூசிகளைப் பெறுவதற்கு ஏற்கனவே சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளனர் எனவும் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தடுப்பூசியை உற்பத்தி செய்யும் நாட்டிலிருந்து அல்லது ஏற்கனவே தடுப்பூசிகளை பெற்றுக்கொண்ட நாட்டிலிருந்து தடுப்பூசிகளைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதிக்கும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில் இந்த முயற்சிகள் இடம்பெறுகின்றன என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

## மன்னாரில் சிறு போக பயிர்ச் செய்கைக்கான நீர் கட்டுக்கரைக் குளத்திலிருந்து திறக்கப்பட்டது

மன்னார் மாவட்டத்தில் சிறு போக பயிர்ச் செய்கைக்கான நீர் நேற்று (திங்கட்கிழமை) மதியம் கட்டுக்கரை குளத்தின் 11 ஆம் கட்டை பிரதான வாய்க்காலின் கதவு ஊடாக வைபவ ரீதியாகத் திறந்து விடப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் இந்த முறை 2 ஆயிரத்து 578 ஏக்கர் நெல் பயிர் செய்கையும் 400 ஏக்கர் மேட்டு நில பயிர் செய்கையும் மேற்கொள்வதற்காக 11ஆம், 12ஆம், 13ஆம் கட்டை மற்றும் சின்ன உடைப்பு, பெரிய உடைப்பு, அடைக்கல மோட்டை போன்ற பிரதான வாய்க்கால்களின் கதவுகள் திறந்து வைக்கப்பட்டவுள்ளன.

இதேவேளை விவசாய ஆராய்ச்சி பண்ணைக்காக முருங்கன் 14 ஆம் கட்டை வாய்க்காலில் இருந்து நீர் விநியோகிக்கப்பட உள்ளது.

குறித்த ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டு பயிர்ச் செய்கைக்கான நீர் விநியோகத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

கொரோனா தொற்று அபாயத்தைக் கருத்திற்கொண்டு குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் சிவராசா யோகராசா, மன்னார் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அப்துல் சுக்கூர் மற்றும் விவசாய அமைப்பின் பிரதி நிதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கலந்து கண்டிருந்தனர்.

மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில் கட்டுக்கரை குளத்தில் தற்போது 7.11 அடி நீர் காணப்படுவதோடு, வான் பாய்ந்து கொண்டிருப்பதாக மன்னார் மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் சிவராசா யோகராசா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸாரின் விடுமுறைகள் யாவும் ரத்து!

கொரோனாப் பரவலை கட்டுப்படுத்தும நோக்கில் நடைமுறைக்கு வரும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாட்டு நடவடிக்கையின் தொடராக நேற்று நள்ளிரவு முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை அனைத்து பொலிஸ் அதிகாரிகளின் விடுமுறைகளும் ரத்து செய்யப்படுகின்றன எனக் காவல் துறை ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் தற்போது இடம்பெற்று வரும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதேவேளை, தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் தனிமைப் படுத்தல் உத்தரவு நீக்கப்படும் வரையில் கடமைக்கு சமுகமளிக்க தேவையில்லை என பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளார்

## குருந்தூர்மலை பௌத்த நிகழ்வு



முல்லைத்தீவு குருந்தூர்மலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பௌத்த நிகழ்வின்போது பிடிக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வே இப்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது.

# தனிமைப்படுத்தலுக்கு உள்ளான மேலும் 6 கிராமசேவகப் பிரிவுகள்

நாட்டில் மேலும் 6 கிராம சேவகர் பிரிவுகளை உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இதற்கமைய -

மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உயன்வத்த மற்றும் உயன்வத்த வடக்கு கிராம சேவகர் பிரிவுகள். மாத்தளை மாவட்டத்தின் ரத்தொட்ட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடஹபுவிட கிராம சேவகர் பிரிவு.

கண்டி மாவட்டத்தின் கடுகன்னாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வலகம்பாய கிராம சேவகர் பிரிவின் திப்புட்ட கிராமம் மற்றும் கொஸ்கஸ்தென்ன கிராமம்.

புத்தளம் மாவட்டத்தின் கொஸ்வத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மெத கிரிமெட்டியான கிராம சேவகர் பிரிவு.

மேற்குறிப்பிடப்பட்ட பிரதேசங்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை குருணாகல் மாவட்டத்தின் கும்புக்கெட்டே பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நிகதலுபொத கிராம சேவகர் பிரிவுக்கு விதிக்கப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

# அரச ஊழியர்கள் தொடர்பான புதிய சுற்றுநிருபம் வெளியானது

கொழும்பு, மே 12

அரசசேவையை தடையின்றி முன்னெடுத்துச் செல்கின்றமை தொடர்பான புதிய சுற்றுநிருபம் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரச ஊழியர்களை கடமைக்கு அழைக்கும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பான விவரங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

செயலாளர்களுக்கும் நிறுவனத் தலைவர்களுக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை எந்தவித இடையூறும் இல்லாமல் செய்யத் தேவையான குறைந்தபட்ச ஊழியர்களை அழைக்க முடிவு செய்ய அதிகாரம் வழங்கப்படுகிறது.

ஒரு மாற்றம் அல்லது முறையான பட்டியலைப் பின்பற்ற வேண்டும் என்றும் கர்ப்பிணி ஊழியர்களை சேவைக்கு அழைக்காதபடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறித்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓர் அதிகாரி கடமைக்கு அழைக்கப்படாதபோதும் அனைத்து அதிகாரிகளும் ஒன்லைனில் கடமைகளைச் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொவிட் இடைநிலைப் பராமரிப்பு நிலையம் கிளிநொச்சி பாரதிபுரத்தில் அமைப்பு



கிளிநொச்சி பாதுகாப்பு படைத் தலைமையகம், பாரதிபுரம் தனிமைப்படுத்தல் நிலையத்தை அனைத்து அவசர மருத்துவ வசதிகள் மற்றும் வைத்திய நிபுணர்கள் சகிதம் இடைநிலை பராமரிப்பு நிலையமாக இராணுவத்தினர் மாற்றி அமைத்துள்ளனர்.

கொவிட் 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் பாதுகாப்புப் பதவி நிலைப் பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சில நாள்களில் இராணுவத்தால் மேம்படுத்தப்பட்ட இடைக்கால சிகிச்சை மையம், கிளிநொச்சி பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் ஹரேந்திர ரணசிங்கவின் நேரடி மேற்பார்வையின் கீழ் இடம் பெற்றுள்ளது.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

### தினையிலுள்ள ஆரோக்கிய பலாபலன்கள்



புரதத்தில் லைசின் அமினோ அமிலம் குறைவாகக் காணப்படும்.

ட்றிப்டொபேனும், சல்பர் அமினோஅமிலமும் ஓரளவு குறைவாகக் காணப்படும். லியுசினும், மெத்தயோனின் அமினோ அமிலங்கள் ஒப்பீட்டளவில் அதிகமாகக் காணப்படும்.

தினையிலுள்ள மாப்பொருள் 100 வீதம் அமைலோபெக்டின் ஆகும்.

ஒட்சியேற்றக் காரணிகள் பொதுவாக அதிகளவிற் காணப்படும். சில வர்க்கங்களில் 100 கிராமில் பொலிபீனோல் 47 மில்லி கிராமும், டொகோபெரோல் 3.34 மில்லி கிராமும் ஈரநிறை அடிப்படையில் உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

இரத்தத்தில் சீனியின் அளவையும், கொலஸ்ரோலின் அளவையும் கட்டுப்படுத்தும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி



இக் கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்





அங்கம் 01

- செல்லத்துரை ரவீந்திரன் -

**1. தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் 'இனப் படுகொலையா'? அல்லது 'இனச் சுத்திகரிப்பா'?**

'இனச் சுத்திகரிப்பு' என்பது இனப் படுகொலையின் இன்னுமோர் வடிவமே. தற்பொழுது எங்கள் நிலைக்கு ஏற்பாக 'இன அழிப்பு' என்று சொல்லும் பாவிக்கப்படுகிறது. அதற்கு என்று தனியான வரைவிலக்கணம் கிடையாது. சம்பவங்களின் தாக்கத்தை பொறுத்து பரவரப்பிற்காக இனப்படுகொலை என்றோ, இனச் சுத்திகரிப்பு என்றோ, இன அழிப்பு என்றோ சொல்லப்படும். பொதுவாக Genocide என்ற வார்த்தை இனப்படுகொலை என்ற அர்த்தத்திலேயே பார்க்கப்படுகின்றது.

வழமையிலுள்ள சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் அடிப்படையிலும், ரோம் சட்டங்களின் பிரகாரமும் ஐந்து குற்றங்கள் பாரதூரமானவையாகக் கருதப்பட்டு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு ஒப்படைக்கப்படுகின்றன. நீதிமன்றின் 51 சரத்தின் அடிப்படையில் அவை இனப்படுகொலை (Genocide), மனித குலத்திற்கெதிரான செயற்பாடுகள் (Crimes against humanity), போர்க் குற்றங்கள் (War crimes), ஆக்கிரமிப்புக் குற்றங்கள் (Crimes of aggression). குற்றவியல் சட்டங்கள் இவை ஒவ்வொன்றிற்கும் வரைவிலக்கணம் (Definition) கொடுத்துள்ளது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஓர் இனத்துக்கோ அன்றில் ஒரு நாட்டில் நடந்தவைகளை ஆராயும்போது மேற்கூறிய ஐந்து குற்றங்களில் ஏதாவது அல்லது எல்லாமே இழைக்கப்பட்டனவா என்று ஆராயும்.

**2. தமிழ் மக்கள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இந்த விடயத்தைப் பாரப்படுத்தக் கோரினால் எந்த அடிப்படையில் அதை நிர்ப்பந்திக்க வேண்டும்? இனப் படுகொலை என்றா?**

குற்றவியல் சட்டத்தில் முக்கியமாக குறிப்பிடப்படுவதாலும் பல படுகொலைகள் எங்களுக்கு மாறி மாறி நடந்திருப்பதாலும் பரபரப்புக்காக இனப்படுகொலை



என்ற வார்த்தையை - வாதத்தை - பாவிக்கலாம். இனச் சுத்திகரிப்பு அல்லது இன அழிப்பு என்ற விளக்கங்களை பாவித்தாலும் அவை இனப்படுகொலையின் ஒரு வடிவமாக, மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றமாகப் பார்க்கப்படும்.

உதாரணத்துக்கு நேரடியான இனப்படுகொலை என்ற குற்றச்சாட்டில் இருந்து தப்பிக்க இனச் சுத்திகரிப்பு என்ற மார்க்கத்தை ஸ்லொபடான் மிலோசோவிக் (Slobodan Milosevic), பொஸ்னியா (Bosnia) கொசோவா (Kosovo) இன மக்களை அழித்த குற்றப் பத்திரிகைகளுக்கு எதிர்வாதம் செய்கையில் பாவித்தார். தான் செய்தது இனப் படுகொலை அல்ல, அவர்களைத் தான் இன ரீதியாக தங்களிடையே இருந்து அதாவது சேபியா (Sorbia) மக்களிடமிருந்து சுத்திகரித்து வெளியேற்றினேன், அது கொலையல்ல என்று வாதாடினார்.

ஆனாலும் இனச் சுத்திகரிப்போ அல்லது இனப் படுகொலையோ இவை மனித குலத்துக்கெதிரான குற்றம் என்று தண்டிக்கப்பட்டார்.

இன்னுமொரு உதாரணத்தை பார்த்தால் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையால் (UN Security Council) சூடான் தேசம் டார்புவில் (Darfur) நடத்திய அட்டூழியங்களுக்கு தீர்மானம் 1593 கீழ் 2005இல் விடயம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தியது.

இதுவே முதன் முதலாக உரோமச் சட்டத்தின் பிரிவு 13(B) ஊடாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபைக்கு பாரப்படுத்திய விசாரணை வழக்காகும். அந்த மாகாணத்தில் 1 ஜூலை 2002 இலிருந்து நடந்த அட்டூழியங்களை ஆராயப் பணித்தது. அந்த ஆராய்வுகளின்படி சூடானின் அரசாங்க ஊழியர்கள் படையினர், அவர்களின் ஏவல்களில் பணியாற்றிய ஆயுததாரிகள், இனப்படுகொலை, போர்குற்றங்கள், மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் எல்லாவற்றையும் புரிந்தார்கள் என்று தீர்ப்பளித்தது.

அது போன்றுதான் 2011இல் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை லிபியா (Libya) நாட்டில் 15 பெப்ரவரி 2011 தொடக்கம் நடந்தவற்றை ஆராயுமாறு 1970 (2011) தீர்மானத்தின் அடிப்படையில் பணித்தது. இதனை ஆராயந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஜனாதிபதி கடாபி உட்பட, ஐந்து பேருக்கு எதிராக அவர்கள் யுத்தக் குற்றங்களும், மனித குலத்திற்கெதிரான குற்றங்களும் புரிந்தார்கள் என்று தீர்ப்பளித்தது. அதில் இனப்படுகொலை என்பது ஏற்கப்படவில்லை. இவற்றிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் ஓர் இனமக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அட்டூழியங்களை ஒரு கால அடிப்படையில் ஆராயுமாறு கோருவதுதான் பொருத்தமானது என்பதே.

**3. 1948இல் இருந்து எங்களுக்கு நடந்ததை ஆராயுமாறு கேட்பதா, அன்றில் வட்டுக்கோட்டை தீர்மானத்தை அடுத்து (1976இலிருந்து) 1977, 1983 என்று முள்ளிவாய்க்கால் வரை நடந்தவற்றை ஆராயக் கேட்பதா?**

கொலைகள் பரபரப்பையும், இரக்கத்தையும் பெறுமென்றாலும் எமது தாயகப் பறிப்பு, சிங்கள பகுதிகளில் இருந்து விரட்டியும் பல வழிகளில் வாழ்வாதாரத்தை பறித்ததும் வாழ்வியலை அழித்து கூட இனப்படுகொலை என்ற பட்டியலில் அடங்கும். 1958, 1977, 1983, 2009 என்று பல்வேறு வழிகளில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். கூட்டாக குமுதினி வள்ளத்தில், கொக்கட்டிச்சோலையில், திருமலையில் என்று காரணமின்றி படுகொலையும் செய்யப்பட்டார்கள். ஆயினும் இவையெல்லாம் தமிழர் என்ற காரணத்திற்காக, திட்டமிட்டு அந்த இனத்தை படுகொலை செய்து அழிக்க செய்யப்பட்டவை என்று நிரூபிக்க வேண்டும்.

ஆகவே நாங்கள் இனப்படுகொலை அல்லது சுத்திகரிப்பு அல்லது இன அழிப்பு என்று முத்திரையிட்டு (label பண்ணி) கேட்கத் தேவையில்லை காலவரையில் நடந்த இவ்வாறான பாரிய குற்றங்களை ஆராய்வதற்கான ஆதாரங்களை பாரப்படுத்த வேண்டும்.

**4. தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு ஆளாகிறார்கள் என்பது ஏன் இன்னும் ஏற்கப்படவில்லை ?**

அதனைத் தீர்மானிக்க வேண்டியது ஒரு மூன்றாம் தரப்பே. அது சர்வதேசமாகலாம். அன்றில் பலம் வாய்ந்த ஒரு நேச நாடாகலாம்.

சர்வதேசமானால் அது வழமையாக நேரடியாகவோ அல்லது ஐ.நாவின் பாதுகாப்புச் சபை ஊடாகவோ, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட வேண்டும். அதனை ரோம் சட்ட (Rome Statue ) வரைவுகளில் அங்கம் வகிக்கும் ஒரு நாடு நேரடியாக பாரப்படுத்தலாம் அதைத் தவிர அரசு சாரா பற்ற, பெயர் வாய்ந்த, மனித உரிமையில் அக்கறையுள்ள நிறுவனங்கள் அன்றில் ஆர்வலர்கள் அறிக்கைகள் தரலாம். ஆனால் அந்த அறிக்கைகள் அபிப்பிராயங்களாக மாத்திரமே இருக்கும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மூலமாக வரும் தீர்ப்புக்கு ஒரு சட்டரீதியான வலுவுண்டு. நேச நாடு அதனை எடுத்துக் கையாள்வதற்கு அரசியல் வலுவுண்டு.

இதனை மிகத் தெளிவாக 20 மார்ச் 2021 நீதியரசர் விக்னேஸ்வரன் நடத்திய ஒரு மெய்நிகர் மாநாட்டில், முன்னாள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் விளங்கப்படுத்தினார்.

அதாவது இனப்படுகொலை என்று அதில் அக்கறை கொண்ட ஆர்வலர்கள் எப்பொழுதுமே ஒரு அளவுக்கு மிஞ்சிய விம்பத்தைத்தான் ஏற்படுத்துவார்கள். அது எதிர்பார்க்கப்படுவதுதான். அதனை அடுத்து சட்ட வல்லுநர்கள் அதற்கான சாட்சியங்களையும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் முடிவில் குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதிகளே அதனை சாட்சியங்களின், ஆவணங்களின் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும் என்பது அவர் கூற்று. இவர் ஆபிரிக்க கண்டத்தின் ருவண்டாவில் நடந்த இனப் படுகொலையை ஆராய ஐ.நாவினால் பணிக்கப்பட்டவர். இவ்விடயத்தில் புலமை பெற்றவர்.

**5. 46ஆவது மனித உரிமைப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆணையாளரின் அறிக்கையில் சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டும் என பரிந்துரை இருந்ததே?**

அப்படியான ஒரு பரிந்துரை இருந்தது. தமிழர்கள் சந்தித்த அனர்த்தங்கள் அப்படியான ஒரு பரிந்துரையைச் சுட்டிக்காட்டி உறுதிப்படுத்தின. இது ஆணையாளரின் அபிப்பிராயமேயன்றி அவராக அதனைத் தீர்மானிக்க முடியாது. அதனை அங்கத்துவ நாடுகள் ஏற்று ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

பாரிய இனப்படுகொலைக்கு நிகரான அனர்த்தங்கள் நடந்தாலும் அதனை இனப்படுகொலை என்றோ இனச் சுத்திகரிப்போ அல்லது இனஅழிப்பு என்று சொல்லாமல், இராஜதந்திர ரீதியில் பல மனித உரிமை ஆர்வலர்களும் செயற்பாட்டாளரும் கூட அதனைப் பொதுவாக "அட்டூழியங்கள்" என்று விவரிப்பது வழமை. அந்த வார்த்தை பிரயோகங்களிலிருந்து அவற்றின் அர்த்தங்களைப் புரிந்து கொள்ளலாம்.

ஆனால் அப்படியான ஒரு தீர்மானம் 46ஆவது அமர்வில் அதனை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தும்படி பொதுச்சபையைக் கேட்குமாறு கோரும் வடிவில் நிறைவேற்றப்படவில்லை.

(தொடரும்)

காலைக்கதிர் Kalaikkathir

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 7,864 பேர் இதுவரை சிக்கினார்கள்

## செவ்வாய் 548 பேர் கைது என்கின்றது பொலிஸ்

இலங்கையில் தனிமைப் படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 548 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

முகக்கவசம் அணியாமை உட்பட தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 7 ஆயிரத்து 864 பேர் இதுவரை கைது செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் மே மாதம் 10ஆம் திகதி (நேற்று) வரையான காலப் பகுதியி லேயே இந்தக் கைதுகள் இடம் பெற்றுள்ளன என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

அதேவேளை, நாட்டில் பல பகுதிகளிலும் பொலிஸா ரின் சோதனை மற்றும் கண் காணிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



# பேசாலையில் வந்திறங்கிய ஏனைய மூவருக்கும் 24 வரை விளக்கமறியல்

**(ந.லோகதயாளன்)**

இந்தியாவில் இருந்து தாய கம் திரும்பிய ஈழ அகதிகள் ஒரு வர் மற்றும் அவரை அழைத்து வந்த இருவர் உட்பட மூவரையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை யில் விளக்க மறியலில் வைக்கு மாறு மன்னார் நீதிவான் நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள் ளது.

இந்தியாவில் இருந்து 3 வாரங்களுக்கு முன்னர் மன் னார் - பேசாலையில் வந்திறங் கிய நால்வரில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்த நிலையில், தொற்றாளர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு அதன் பின்னர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள் ளார்.

இதேநேரம் எஞ்சிய மூவரில் ஒருவர் இந்தியாவில் இருந்து திரும் பியவர் எனவும், எஞ்சிய இருவரும் மன்னாரில் இருந்து சென்று இந்தியாவில் இருந் தவர்களை அழைத்து வந்த நிலையில் கைது செய்யப்பட்ட வர்கள் எனவும் தெரிவிக்கப்பட் டது.

இந்த மூவரும் இன்று மன் னார் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது இந்தியா வில் இருந்து தாயகம் திரும்பிய வரை இலங்கைப் பிரஜை என் பதை நிரூபிக்கும் ஆவணங் களைச் சமர்ப்பிக்குமாறு கோரி மூவரும் எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர்.

### இலங்கைக்குக் கடத்த முயன்ற

# 45 லட்சம் ரூபா மதிப்புள்ள வெள்ளிக்கொலுசுகளுடன் தூத்துக்குடியில் ஒருவர் கைது





**(ந.லோகதயாளன்)**

இலங்கைக்குக் கடத்த முயன்ற 45 லட்சம் ரூபா மதிப் புள்ள வெள்ளிக் கொலுசுகளு டன் தூத்துக்குடிப் பகுதியில் ஒருவர் தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்குக் கடத்த முயன்ற நிலையில் இந்திய நாணயம் 18 லட்சம் ரூபா பெறுமதி மதிப்புள்ள வெள்ளிக்கொலுசுகள் பொலி ஸாரால் பறிமுதல் செய்யப்பட் டுள்ளன.

இலங்கைக்கு சட்டவிரோத மாக வெள்ளிக் கொலுசுகள் கடத்தப்பட இருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் இனிகோ நகரைச் சேர்ந்த 38 வயதான மீனவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி னர்.

அவர் அளித்த தகவலின் பேரில் தூத்துக்குடி திரேஸ் புரத் தைச் சேர்ந்த மார்ட்டின் அந் தோணி (வயது 50) என்பவரது வீட்டில் சோதனையிட்டதில், 25 கிலோ எடையுள்ள வெள்ளிக் கொலுசுகள் பதுக்கி வைத்திருந் தமை தெரியவந்தது.

இதன் மதிப்பு இலங்கை ரூபா 45 லட்சம் எனக் கூறப்படு கிறது. இதையடுத்து பொலிஸார் 25 கிலோ வெள்ளிக்கொலுசு களைப் பறிமுதல் செய்தனர். மேலும், குறித்த மீனவரையும் கைது செய்தனர். தலைமறை வாகவுள்ள அந்தோணி என்பவ ரைப் பொலிஸார் தேடிவருகின் றனர்.

# சர்வகட்சிக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுக!

## அரசிடம் ஐக்கிய மக்கள் சக்தி வேண்டுகோள்

கொரோனா வைரஸ் பரவ லைக் கட்டுப்படுத்தி நாட்டு மக்க ளைப் பாதுகாப்பதற்குத் தேவை யான நடவடிக்கைகளை முன் னெடுப்பது சம்பந்தமாக ஆராய் வதற்காக உடனடியாக சர்வகட் சிக் கூட்டத்தைக் கூட்டுமாறு பிர தான எதிர்க்கட்சியான ஐக்கிய மக் கள் சக்தி, அரசிடம் கோரிக்கை விடுத் துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரான கபீர் ஹாசீம் எம்.பி. மேற்படி வேண்டு கோளை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கொரோனா வைரஸ் பரவ லின் முதலாவது அலையின் போது அரசு, சர்வகட்சிக் கூட்டத் தைக் கூட்டியது. எதிர்க்கட்சியின் சார்பில் தலைவர் சஜித் பிரேம தாஸவும், செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் பங்கேற்ற னர். இரண்டு கூட்டங்களுக்கு மாத்திரமே அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. முதலாவது அலையை சிறப் பாகக் கட்டுப்படுத்து கின்றோம், எனவே, முழுப்புகழும் அரசுக்கே கிடைக்கவேண்டும் என்ற எண் ணத்தில் எதிர்க்கட்சிகளை அரசு இவ்வாறு புறக்கணித்திருக் கக்கூடும்.

ஆனால், இன்று என்ன நடக் கின்றது? வைரஸ் பரவலைக் கட் டுப்படுத்துவதில் அரசு தோல்வி கண்டுள்ளது. இந்த நிலைமை தொடருமானால் நெருக்கடி யான நிலைமை உருவாகக் கூடும். எனவே, மக்களைப் பாது காத்து, நாட்டை மீட்டெடுக்க வேண்டும்.



இதற்காக சர்வகட்சித் தலை வர் கூட்டத்தைக் கூட்டுமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கின் றோம். அனைத்து கட்சிகளுக் கும் அழைப்பு விடுக்கவும். யோசனைகளை, ஆலோசனை களை உள் வாங்கவும். நாட்டை மீட்க இணைந்து செயற்படு வோம். பிறகு அரசியல் செய் யலாம் - என்றார்.

### மாகாணங்களுக்கு இடையிலான

# செவ்வாய் நள்ளிரவு முதல் பயணக் கட்டுப்பாடு அமுல்

## தேவைப்பட்டால் மாவட்டங்களுக்கு இடையேயும் கட்டுப்பாடு வரும் என்கிறார் இராணுவத் தளபதி

இலங்கையில் இன்று நள் ளிரவு முதல் மாகாணங்களுக்கு இடையே பயணக் கட்டுப்பாட்டை விதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட் டுள்ளது எனக் கொரோனாக் கட் டுப்பாட்டுக்கான தேசிய செயற் பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரி வித்தார்.

நேற்று நள்ளிரவு முதல் மாகா ணங்களுக்கு இடையே பயணக் கட்டுப்பாட்டு அமுல் என்று ஜனா திபதி செயலகம் நேற்றிரவு தெரி வித்திருந்தது. ஆனால், இன்று காலையில் இராணுவத் தளபதி யின் அறிவிப்பின்படி , இன்று நள்ளிரவு முதலே பயணக்கட் டுப்பாடு அமுல் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

மே 30ஆம் திகதி வரையில் இந்தப் பயணக் கட்டுப்பாடு நடை முறையில் இருக்கும் என்றும் இராணுவத் தளபதி கூறினார்.



இந்தக் காலப்பகுதியில் அத் தியாவசிய சேவைகள் தடை யின்றி முன்னெடுக்கப்படும் என் றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நிலை மையைக் கருத்தில்கொண்டு தேவைப்பட்டால் மாவட்டங்க ளுக்கு இடையே பயணக் கட்டுப் பாட்டை விதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இலங்கையின் நிலைமை மோசம்

# ஜனவரி மாதம் முதல் இதுவரை 80 ஆயிரம் பேருக்குக் கொரோனா

கொழும்பு, மே 11

இலங்கையில் 2021 ஜனவரி மாதம் முதல் மே 11ஆம் திகதி (இன்று) காலை வரையில் 80 ஆயிரத்து 68 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றி யுள்ளது எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி ஜனவரி மாதம் 20 ஆயி ரத்து 696 பேரும், பெப்ர வரி மாதம் 19 ஆயிரத்து 85 பேரும், மார்ச் மாதம் 9 ஆயிரத்து 463 பேரும், ஏப்ரல் மாதம் 15 ஆயிரத்து 440 பேரும் கொரோனா வால் பாதிக்கப்பட்டுள்ளர்.

அத்துடன் இம்மாதத்தில் மே 1 முதல் 11ஆம் திகதி காலை வரை 20 ஆயிரத்து 384 பேருக் குக் கொரோனா வைரஸ் தொற் றியுள்ளது. மேல் மாகாணத்தி லேயே அதிகளவான தொற்றா ளர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

# நாடாளுமன்றம் வரை பரவியது தொற்று

இலங்கை நாடாளுமன்றத் தில் உரை மொழி பெயர்ப்பு பிரி விலுள்ள ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அந் தப்பிரிவிலுள்ள பலரும் தனி மைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஏற்கனவே நாடா ளுமன்ற ஊழியர் ஒருவருக்குத் தொற்று உறுதியான நிலையில், சபாநாயகரது அலுவலகமும் கடந்த வாரத்திலிருந்து இழுத்து மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி கோட்டா பரிந்துரை சீனத் தடுப்பூசிக்கும் அனுமதி



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பரிந்துரைக்கு அமையவே உலக சுகாதார ஸ்தாபனம் சீனத் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கியது என சமூக ஊடகங்களில் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது.

நாட்டின் கொவிட் நிலைமைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக்கில் ஜனாதிபதியின்ஊடகப்பேச்சாளர்கிங்ஸ்லி ரட்நாயக்க ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் சீன உற்பத்தியான சினோபோர்ம் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கியமை தொடர்பாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதிகோட்டாபயராஜபக்ஷமெய்நிகர் தொழில்நுட்பத்தின் ஊடாக உலக சுகாதார ஸ்தாபன முக்கியஸ்தர் களுடன் நடத்திய பேச்சின் பிரதிபலனாக சீனத் தடுப்பூசியை அவசர தேவைக்காகப் பயன்படுத்த அனுமதி கிடைக்கப் பெற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் பேச்சைத் தொடர்ந்து அன்றைய தினமே இந்தத் தடுப்பூசிக்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள் ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி சினோபோர்ம் தடுப்பூசி இலங்கையில் ஏற்றும் நடவடிக்கை உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கிய மறுதினம் முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பலம்பொருந்திய நாடுகளில் ஒன்றான சீனாவின் சினோபோர்ம் கொவிட் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் நீண்ட நாள்களாக அனுமதி வழங்காதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்றாக உணவு உண்ண வேண்டாம் ஊழியர்களுக்கான அவசர அறிவித்தல்

கொழும்பு, மே 12

நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் சேவையாற்றும் ஊழியர்கள் ஒன்றாக இணைந்து உணவுஉண்ணவேண்டாம்எனபொலிஸ் தலைமையகம் அனைத்து ஊழியர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

உணவு மற்றும் பானங்களை அருந்தும்போது முகக்கவசத்தை கழற்ற வேண்டும் என்பதால், பலர் ஒன்றாக அமர்ந்து உணவு உண்பதால், கொவிட் 19 வைரஸ் பரவலாம்எனபொலிஸ்ஊடகப்பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் அல்லது அலுவலகங்களில் பணிபுரிவோர் தமது பணியிடங்களில் முகக்கவசம் அணிதல், இடைவெளியைப் பேணுதல் என்பன கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும் எனவும் அஜித் றோஹண குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகத்தில் இருந்து படகில் யாழ் வந்த வர்த்தகர் கைது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே.12

யாழில் இருந்து இந்தியாவிற்கு விமானம் மூலம் பயணித்த வர்த்தகர் ஒருவர் சட்டவிரோதமாகக் கடல்வழியாக யாழ்ப்பாணம் திரும்பி வந்திருந்த நிலையில் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழில் இருந்து இந்திய நுழைவு விசா பெற்று ஏப்பிரல் மாதம் இந்தியா சென்ற ஒருவர் கடல் மார்க்கமாக படகு உரிமையாளருக்கு ஒரு லட்சம் ரூபா செலுத்தி நேற்று முன்தினம் நாட்டிற்குள் இரகசியமாக வந்துதுள்ளார்.

மன்னார் பேசாலை வழியாக வருகை தந்து மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பஸ்ஸில் பயணித்துள்ளார். இதனை அறிந்து கடற்படையினர் நேற்றைய தினம் அந்த வர்த்தகரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சங்கானையைச் சேர்ந்த வர்த்தகர் காரைநகரில் கடற்படையினரின் பராமரிப்பில் உள்ள கொரோனா தடுப்பு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இந்தியா – இலங்கை இடையேயான விமான சேவை நிறுத்தப்பட்டதனால் கடல் வழியாக திருட்டுத்தனமாக ஆள்கள் உட்பிரவேசிக்க வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகின்றது.

## குருந்தூரில் இராணுவப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெறுகின்றன எனவும் அப்பகுதி மக்கள் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரனிடம் தெரியப்படுத்தியிருந்தனர்.

அத்தோடு என்றுமில்லாதவாறு ஆறுமுகத்தான்குளம், தண்ணிமுறிப்புப் பகுதிகளில் இராணுவம் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுகின்றது எனவும், அவ்வாறு பாதுகாப்புக் கடமையிலுள்ள இராணுவத்தினர் குருந்தூர் மலையை அண்டிய பகுதிகளிலுள்ள வயல் நிலங்களுக்குச் செல்பவர்களை வழிமறிப்பதாகவும் மக்களால் மேலும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று குருந்தூர் மலைப் பகுதிக்குச் சென்ற ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் அங்குள்ள நிலைமைளைப் பார்வையிட்டனர். அப்போது அங்கே இராணுவத்தினர் கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதமை தொடர்பில் ரவிகரன் கேள்வி எழுப்பினார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கொரோனா சுகாதார நடைமுறைகளுக்கு மாறாக யாராவது செயற்பட்டாலோ அல்லது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யாராவது செய்ய முற்பட்டாலோ தராதரமின்றி அனைவரையும் கைது செய்வோம் என இராணுவத் தளபதி அறிக்கைகளை வெளியிட்டிருக்கும் நிலையில், இங்கு இராணுவத்தினரும் தொல்லியல் திணைக்களத்தினரும் சுகாதார நடைமுறைகளை மீறி பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளில் தீவிரமாகச் செயற்படுகின்றனர்.

குருந்தூர்மலையில் நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் ஏதோ இடம்பெறுகின்றது என அப்பகுதிமக்கள் என்னிடம் முறையிட்டிருந்தனர்.

குறிப்பாக குமுழமுனை, ஆறுமுகத்தான்குளம் மற்றும் தண்ணிமுறிப்பு வயல்களில் வேலைசெய்கின்ற பொதுமக்கள் எனப் பலராலும் எங்களுக்கு இந்த முறைப்பாடுகள் கிடைத்தன.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு உடனேயே செல்ல முடியாத நிலையில், நேற்று குருந்தூர்மலைக்குச் சென்றிருந்தோம்.

அங்கு குருந்தூர்மலைக்குச் செல்லும் வழியில் ஆறுமுகத்தான் குளத்திலிருந்து கிட்டத்தட்ட நான்கு இடங்களில் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அத்தோடு குருந்தூர் மலைக்கு நுழையும் வீதியில் குருந்தூர் மலைக்கு அண்மையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இரு இராணுவத்தினர் எம்மை அங்கு செல்லவிடாது தடுத்திருந்தனர்.

அப்போது குருந்தூர் மலைப் பகுதியிலிருந்து பத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் வெளியேறிக்கொண்டிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில், நாம் குருந்தூர் மலைக்குச் செல்லவேண்டும் என அந்த இராணுவத்தினரிடம் வலியுறுத்தியிருந்த நிலையில், குறித்த இராணுவத்தினர், தொலைபேசி அழைப்பு ஒன்றை ஏற்படுத்திவிட்டு உள்ளே செல்வதற்கு அனுமதித்திருந்தனர்.

அந்தவகையில், நேரடியாக நாம் குருந்தூர் மலை அடிவாரத்துக்குச் சென்றிருந்தோம். அங்கு தொல்லியல் திணைக்களத்தினரும், அதிகளவான இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

அங்கு நேற்றுமுன்தினம் பாரிய அளவில் நிகழ்வு ஒன்று இடம்பெற்றமை குறித்தும் அங்கிருந்த இராணுவத்தினரிடம் கேள்வி எழுப்பியிருந்தோம்.

பௌத்த பிக்குகளும், வழிபாடுகளுக்குரியவர்களும், இராணுவத்தினரும்தான் அங்கு வருகை தந்தனர் என்று இராணுவத்தினர் பதிலளித்திருந்தனர்.

அதேவேளை, அங்கிருந்த இராணுவத்தினர் மற்றும் தொல்லியல் திணைக்களத்தினர் கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பேணாதிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அந்தவகையில் இராணுவத் தளபதி கொரோனா சுகாதார நடைமுறைகளில் இறுக்கமான கட்டுப்பாடுகளைப் பின்பற்றுமாறு அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கும் நிலையில், நீங்கள் ஏன் கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவில்லை என அவர்களிடம் கேள்வி எழுப்பியிருந்தோம். அப்போது அங்கிருந்தவர்கள் சற்றுத் தடுமாறியதுடன், உடனேயே அவர்கள் முகக் கவசங்களையும் அணிந்துகொண்டனர்.

இந்நிலையில் நாங்கள் மலையடிவாரத்திலிருந்து, குருந்தூர்மலையின் மேற்பகுதிக்குச் செல்லவேண்டும், அங்கு நாம் எமது சமய வழிபாடுகளை மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டபோது அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள்.

குருந்தூர் மலையின் மேற்பகுதிக்குச் செல்லவேண்டுமானால் தொல்லியல் திணைக்களத்தினுடைய அனுமதி பெறப்படவேண்டும் எனவும், அவ்வாறு அனுமதி பெற்று வந்தால் மலையின் மேற்பகுதிக்குச் செல்ல அனுமதிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அப்படியெனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வுக்கு வந்தவர்கள் அனுமதிகளைப் பெற்று வந்தார்களா எனக் கேள்வி எழுப்பியபோது அவர்கள் அனுமதிகளைப் பெற்றே வந்ததாக இராணுவத்தினர் தெரிவித்தார்கள்.

இது தொடர்பில் அப்பகுதி பொதுமக்கள் என்னிடம் முறையிடும்போது, பௌத்த பிக்குகள் கிட்டத்தட்ட 29 பேர் அங்கு வந்திருந்தனர் எனவும், அத்தோடு கிட்டத்தட்ட30 ஓட்டோக்கள் அங்கு வந்தன எனவும், அதில் வந்தவர்கள் பொதுமக்களாக இருக்கலாம் எனவும் தெரிவித்தனர்.

இதுதவிர ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய நட்சத்திரத் தரங்களில் உள்ள அதிசொகுசு இராணுவ வாகனங்கள், ஐம்பதுக்கும் மேற்பட்ட சொகுசு வாகனங்கள், இராணுவ வாகனங்கள் எனப் பல வாகனங்கள் அங்கு சென்றன எனவும் பொதுமக்கள் எம்மிடம் முறையிட்டிருந்தனர்.

இந்தவிடயத்திலே குறிப்பாக, முல்லைத்தீவு என்பது தமிழர்களுடைய இடமாகும். இதிலே குருந்தூர் மலையானது எங்களுடைய தமிழ் மக்களுக்குரிய மலையாகும். இங்கு எமது தமிழ் மக்கள் பூர்வீகமாக ஐயனார் வழிபாடுகளைச் செய்ததுடன், குருந்தூர் மலையை அண்டிய பகுதிகளில் எமது தமிழ் மக்கள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளையும் செய்து வருகின்றனர்.

அவ்வாறு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் எமது தமிழ் மக்களுக்குக் குருந்தூர் மலையிலுள்ள ஐயனார் காவல் தெய்வமாக இருக்கின்றது என எமது தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

இப்படியாக தமிழர்களின் பூர்வீக குருந்தூர் மலையை, சிங்கள மயப்படுத்தத் தீவிரப்படுத்தியிருக்கின்றார்கள்.

இது தவிர கொரநா சுகாதார நடமுறைகளுக்கு மாறாக யாராவது செயற்பட்டாலோ அல்லது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யாராவது செய்ய முற்பட்டாலோ தராதரமின்றி அனைவரையும் கைதுசெய்வோம் என்று இராணுவத் தளபதி அறிக்கைகளை வெளியிடுகின்றார்.

இவ்வாறிருக்க குருந்தூர் மலையில் கொரோனா சுகாதார நடமுறைகளைப் பின்பற்றாத இராணுவத்தினர் கைது செய்யப்படாதது ஏன்? அவ்வாறு சுகாதாரநடைமுறைகளைப் பின்பற்றாத இராணுவத்தினருக்குரிய நடவடிக்கை என்ன?

அவ்வாறு இராணுவத்தினர் சுகாதார நடமுறைகளை மீறியதற்குரிய ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன.

முள்ளிவாய்க்காலிலே கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நினைவேந்தலைச் செய்தாலும் கைது செய்யப்படுவோம் என்று கூறப்படுகின்றது. ஆனால், இங்கு கொரோனாத் தொற்று அசாதாரண நிலையையும் கருத்தில் கொள்ளாது, சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படாது தமிழர்களின் பூர்வீக குருந்தூர் மலையை சிங்களமயப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் பாரிய இராணுவப் பாதுகாப்புக்களுடன் மேற்கொள்ளப்படுகின்றன. இது எந்த வகையில் நியாயம்?

அதேவேளை, குருந்தூர் மலையில் இடம்பெறும் அகழ்வாராட்சி நடவடிக்கைகளில், யாழ் பல்கலைக்கழக தொல்லியல் துறை சார்ந்தவர்களும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்று நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளை இங்கு மீறப்பட்டுள்ளது.

இந்நிலையில் மலையின் மேற்பகுதிக்குச் செல்வதற்கு எமக்கு அனுமதி மறுக்கப்பட்டதால், அங்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் அறிய முடியாதுள்ளது. குறிப்பாக கட்டடங்கள் எவையாவது கட்டப்படுகின்றதா என்பது தொடர்பிலும் அறியமுடியாதுள்ளது – என்றார்.

## பேரழிவு ஏற்படும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதாரத்துறை முற்றாக செயலிழப்பதைத் தவிர்க்க முடியாது.

தற்போதைய கொரோனா வைரஸ் புதிய திரிவுகள் சிறிய பகுதிகளை முடக்கினாலும் கூட வேகமாகப் பரவுகின்றது.

இலங்கை மருத்துவ அதிகாதரிகள் சங்கத்தைச் சேர்ந்த குழுவொன்று கடந்த மே 10 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்து தொற்று நோய் பரவலின் அடிப்படையில் மாவட்ட மற்றும் மாகாண அளவில் பரந்த முடக்க நிலையை அமுல் செய்யுமாறு கேட்டுக்கொண்டது.

எனினும், மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்களையே ஜனாதிபதி நிறுத்தியுள்ளார்.

நாட்டில் தற்போது ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர் எண்ணிக்கையும், தீவிர சிகிச்சைப் பிரிவுக்காகக் காத்திருக்கும் நோயாளர் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகின்றது என்பதையும் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினோம்.


அத்துடன், போதிய பி.சி.ஆர். செய்யும் வசதிகள் காணப்படவில்லை. குறிப்பாக புற நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் பி.சி.ஆர். பரிசோதனைகள் பற்றாக்குறையாக உள்ளன.

தற்போது நடெங்கும் தொற்று நோயாளிகள் வீடுகளில் தங்கியிருக்கின்றனர். மருத்துவமனைகள் அல்லது கொரோனா சிகிச்சை மையங்களில் வெற்றிடம் ஏற்படும் வரை அவர்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

எனவே, தொற்று நோய் தொடர்ந்து அதிகரிப்பதைத் தடுக்க விரைவான நடவடிக்கை எடுக்காவிட்டால் நாட்டில் சுகாதாரத்துறை பராமரிப்புத் திறனை முழுமையாக இழந்துவிடும் ஆபத்து உள்ளது – என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# வாகனப் போக்குவரத்துகள் ட்ரோன் மூலம் கண்காணிப்பு



பொலிஸ் விசேட அதிரடிப்படையின் ட்ரோன் கமராப் பிரிவு நேற்றுத் தொடக்கம் வாகனப் போக்குவரத்து நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான வருண ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரின் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவது, வீதிச் சட்டங்களை மீறும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதும் இதன் நோக்கமாகும்.

காலி வீதி, நாடாளுமன்ற வீதி, கண்டி - நீர்கொழும்பு வீதிகள் ஆகிய இடங்களை இலக்காகக் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

ட்ரோன் கமராக்கள் 5 இடங்களில் இருந்து கண்காணிப்புக்களை மேற்கொள்ள இருக்கின்றன என்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான வருண ஜயசுந்தர மேலும் தெரிவித்தார்.

# குவைத்துக்குள் நுழைய தற்காலிகத் தடைவிதிப்பு

இலங்கையில் இருந்து வரும் பயணிகள் விமானங்களை மறு அறிவித்தல் வரை ரத்துச் செய்வதற்கு குவைட் இராச்சியம் தீர்மானித்துள்ளது.

கொவிட் 19 பரவல் நிலையைக் கருத்திற் கொண்டு இலங்கை, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய அரபு இராச்சியமும் இன்று (புதன்கிழமை) தொடக்கம் இலங்கை பயணிகள் விமானங்களுக்குத் தடை விதிப்பதாக கடந்த திங்கட்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அதேபோல், மலேசியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளும் இந்நாட்டு பயணிகள் விமானங்களுக்குத் தற்காலிகத் தடையை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ரயில் சேவைகள் நேரம் மாற்றம்

நேற்று (செவ்வாய்க் கிழமை) நள்ளிரவு முதல் மாகாணங்களுக்கு இடையிலான ரயில் போக்குவரத்தை ரத்துச் செய்ய தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அதன்படி, ஒவ்வொரு மாகாணங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் ரயில் சேவைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ரயில்வே திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மாகாணங்களுக்கு இடையில் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான அரச மற்றும் தனியார் பஸ் போக்குவரத்து சேவையை நேற்று (செவ்வாய்க்கிழமை) நள்ளிரவு முதல் ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைகளுக்காக பஸ்களைப் பயன்படுத்தும் விதம் பின்னர் அறிவிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.











## சிறுநீரகம் தேவை

32 வயதுடைய A+ குருதி வகையைச் சேர்ந்த ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு A+ அல்லது A- அல்லது O+ அல்லது O- Group வகையைச் சேர்ந்த சிறுநீரகத்தைத் தானமாக வழங்கக் கூடியவர் தொடர்பு கொள்ளவும். தகுதி உடையவருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- SANJU
076 531 4995
075 576 0264





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.05.2021 இல் வெளியிடப்பெற்றது.